# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: பால்வண்ணன்

மலர் 1 | 1954 ஏப்ரல் 24 | விலை அணா இரண்டு | இதழ் 17


2 APR 1954

199106.

## ஏஜென்டு தோழர்களுக்கு

கன்னித் தமிழ் நாட்டில் களிநடனம் புரிந்து வரும் **கலைமன்றம்** மே மாதம் முதல் நாள் முதல் 40 பக்கங்களுடன் வெளிவர இருக்கிறது என்னும் செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். விலை அணா 4. நல்ல பல செய்திகளைத் தாங்கி வெளிவரும். பத்திரிகை எப்படி இருக்க வேண்டும் என்று பொது மக்கள் விரும்புகிறார்கள் என்பதை கலைமன்றத்தின் மூலம் கேட்டிருந்தோம். பொது மக்களும் தங்கள் கருத்தினை தெரிவித்துள்ளனர். ஆகவே அவர்கள் விருப்பப்படி செயலாற்றவே மே மாதம் முதல் நாள்முதல் 4 அணா விலையில் வெளிவருகிறது. நமக்கு நல்லுரை வழங்கிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மிக குறைந்த காலத்தில் நல்ல மதிப்புள்ள பத்திரிகையாக செய்ய உதவிய மக்கள் அனைவருக்கும், ஏஜென்டு தோழர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மே முதல் நாள் முதல் நல்ல மூவர்ண மேலட்டையுடனும், இது வரையில் வெளிவராத, மக்கள உள்ளத்தை கவரச்செய்யும் பெரிய தொடர் கதையும், சமுதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சிறு கதைகளும், இலக்கிய பகுதிகளும், தலைவர்கள் வாழ்க்கை வரலாறுகளும், பெண்கள் முன்னேற்றத்திற்கான பல நல்ல விஷயங்களும், மேல்நாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பெரும் கதைகளும், சிறுவர் சிந்தனையைக் கிளறும் நல்ல பல கதைகளும், திரைப்பட விஷயங்களும், உலக விஷயங்களும் இன்னும் பல சிறந்த அம்சங்களும் நிறைந்து வெளிவருகிறது.

**ஆகவே ஏஜென்டு தோழர்கள் அனைவரும் தங்களுக்கு வேண்டிய பிரதிகளை மறுபடியும் புதிதாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.**

**ஒவ்வொரு பிரதிக்கும் ரூ 1—0—0 வீதம் முன் பணம் அனுப்ப வேண்டும். மற்ற நிபந்தனைகள் வழக்கம் போல்.**

ஆகவே இதுவரையில் அன்புடன் ஒத்துழைத்து ஊக்கம் தந்த நீங்கள் அனைவரும் மூன்று தினங்களுக்குள் உங்கள் முடிவுகளை முன் பணத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்



# உலக அரங்கம்

## ஐ. நா. ஆயுத குறைப்பு

இந்தியப் பிரதம மந்திரி, ஹைட்ரஜன் குண்டு சோதனைகள் சம்பந்தமாக 'ஸ்தம்பன' உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு விடுத்த 4 அம்ச திட்டத்தை உடனடியாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு ஆயுதக் குறைப்புக் கமிஷன் முன் இந்தியப் பிரதிநிதி 8-4-54-ல் இரவு திடீரென பிரரேபித்தார்.

## உலகப் புகழ்ப் பெற்ற தமிழ் மாணவர்

திரு. பி. வேலாயுதம் லண்டன் பல்கலைக் கழகத்தில் தற்போது சர்வதேச பட்டம் பி. எச். டி. பட்டத்திற்கு படித்துவருகிறார். இவர் ஹேக் சர்வதேச சட்டக் கழகத்தில் பட்டம் பெற்றார். இப்பட்டம் பெற்ற (சென்னையைச் சேர்ந்த) முதல் இந்தியர் இவர்தான்.

## கிளாஸ்கோ ஹெரால்ட் கூறுகிறது

"பிரெஞ்சிந்திய பிரதேசங்களான புதுவை, ஏனம், மாஹி, காரைக்கால் இவற்றை கவனிக்க பிரான்சுக்கு ஆண்டுதோறும் 10 லட்சம் பிராங்குகள் செலவாகிறது.

போர்த்துகீசிய பிரதேசங்களான கோவா, டையு, டாமன் ஆகிய பிரதேசங்கள் சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நிலையில் இருக்கின்றன. இவற்றில் எந்த பிரதேசமும் போர்ச்சுகலுடன் வியாபாரம் வைத்துக்கொள்ளவில்லை. இதனால் மேற்கூறிய பிரதேசங்களால் அவற்றை ஆளும் நாடுகளுக்கு எவ்வித லாபமும் இல்லை.

கிழக்கு நாடுகளில் பிரெஞ்சிந்திய பிரதேசங்களும், போர்த்துகீசிய பிரதேசங்களும் காலனி ஆதிக்கத்தின் பழங்கால சின்னங்களாகும்" என்று கிளாஸ்கோ ஹெரால்ட் பத்திரிகை கூறுகிறது.

## கோபால்ட் குண்டு

கோபால்ட் குண்டு ரேடியத்தை விட 320 மடங்கு சக்திவாய்ந்தது. இதனை வெடிப்பதால் எழும் நச்சுப் புகை மண்டலம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு பறந்து செல்லக் கூடிய சக்தி வாய்ந்தது. செல்லும் வழியில் நச்சுக் காற்று பரவி அதனால் பல்லாயிரக்கணக்கில் உயிர்களை மடியச் செய்யும் சக்தி வாய்ந்தது என்று நியூயார்க் டைம்ஸ் விஞ்ஞான நிபுணர் வில்லியம் லாஸன்ஸ் கூறுகிறார். இதைப்பற்றி நான்கு ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் ஐன்ஸ்டீன் எச்சரித்துள்ளார்.

## இரு விமானங்களின் மோதல்

கனடாவில் முதன் முதலாக பிரயாணி ஆகாய விமானமும், கனடா ஆகாயப் படைப் பயிற்சி விமானமும் ஆகாய வெளியில் பறந்து கொண்டிருக்கும்போது மோதி தீப்பிடித்து கீழே வீழ்ந்து நொறுங்கியது. பிரயாணி விமானத்தில் 31 பிரயாணிகளும் 4 சிப்பந்திகளும், படைப் பயிற்சி விமானத்தில் இருவரும் ஆக 37 பேர் இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.


கலைமன்றம்

மே விழா மலர்

விலை அணா 4 ★ பக்கங்கள் 40

அழகான முகப்பு ஆழமான கருத்துகள்

இவைகளுடன் வெளிவருகிறது

# நான் ஏன் நாத்திகன்

மூலம் — இங்கர்சால்
தமிழ் — ஊடுருவி

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு காரணம் இருந்தே தீர வேண்டும் என்று நாம் அறியும் போது, ஒவ்வொரு நிகழ்ச்சியும் இயற்கையாகவே உண்டாகிறது என்று உணரக்கூடிய அறிவளர்ச்சிக்குரிய முடிவுக்கே வருகிறோம்.

ஆகவே ஒரு நாட்டிற்குரிய மண் வளம், மக்கள், அறிவு, வர்த்தகம், சமுதாயம் முதலியவைகள் நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டும் அப்படி இல்லையென்றால் அந்த நாட்டின் மக்கள் சமுதாயம் என்றும் பெருமையடைய முடியாது. வலிவு பெற இயலாது, செல்வ முடைய தாகத் திகழாது. இவ்விதமாக நாம் ஆராய்ந்து பார்க்கும் போது இதுவரையில் நாம் பார்க்கும் எல்லாவரலாறுகளும் பொய்க் கதைகள் என்பதை அறிகிறோம்.

அதுமட்டுமா? மத சம்பந்தமான விஷயங்களிலும் இக்கருத்து உண்மை உடையதாகும்.

நல்ல அறிவாளி என்று மதிக்கப் படும் ஒரு அமெரிக்கன் என்ன நினைக்கின்றான் மற்ற மதங்களைப் பற்றி? இந்திய நாட்டில் பெருமை படுத்திப் பேசப் படுகின்ற மதங்களையும் எகிப்து, கிரீஸ் நாட்டில் தோன்றிய மதங்களையும், ரோம், மெக்ஸிகோ நாட்டு மதங்களையும் பொய் மதங்கள் என்றே கருதுகின்றான். அத்துடன் இம் மதங்களைச் சார்ந்த எல்லா அற்புத நிகழ்ச்சிகளையும், அதிசய நிகழ்ச்சிகளையும் தவறானவை, நடக்க முடியாதவை என்பதே அவனுடைய துணிவு.

இதைப் போலவே ஒவ்வொரு அறிவுள்ள இந்தியனும் தம் மதம் ஒன்றுதான் உயர்ந்தது. அதிசய அற்புதங்கள் நிறைந்தது என்று கூறி மற்றமதங்களின் அற்புதங்களைத் திருவிளையாடல்களை வெறுக்கிறான்.

இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்?

பொதுவாகவே மக்கள் பிற மதங்களில் உள்ள குறைபாடுகளை மிக்க கவனமாக அறிகின்றனர். ஆனால் பிறமதங்களின் குறைபாடுகளை கவனித்து அறிவதைப் போல தம் சொந்த மதத்தை சேர்ந்த பேதங்களைச் சாத்திரங்களை ஆராய்ந்து அதிலுள்ள குறைபாடுகளை என்றுதான் கண்டு அறிவார்களோ! நாம் அறியோம்.

பொய்மதங்கள் என்று நாம் கூறுவதெல்லாம் அற்புதங்களினால் அலங்கரிக்கப் படுகின்றன. சின்னங்களால் காப்பாற்றப் படுகின்றன—விசித்திரங்களால் விளக்கப் படுகின்றன தீர்க்கத்தரிசிகள் என்றுகூறுபவர்களால் கட்டிக் காக்கப் படுகின்றன—உயிர் பலிகள் மூலம் உறுதிப்படுத்தப் படுகின்றன.

நம்முடைய மதமும் அப்படித்தான் மெய்ப்பிக்கப் படுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நம்முடைய சாட்சிகளும் மற்றமதங்களுக்கு இருப்பவை போலவேதான் அமைந்திருக்கிறது. நாம் மதத்துறையில் பெற்றிருக்கும் வெற்றியும் அவர்களுடைய வெற்றியைவிட எந்த விதத்திலும் உயர்ந்ததோ—சிறந்ததோ ஆகாது. பிற மதங்களில் உள்ள அற்புதங்கள் பொய் என்றால், நம்முடைய அற்புதங்கள் மட்டும் எப்படி மெய்யாக முடியும்? இதனை சிந்திக்க வேண்டாமா? இந்தியாவாக இருந்தால் என்ன? பாலஸ்தீனமாயிருந்தால் என்ன? எல்லா இடங்களிலும் இயற்கை விதி என்பது ஒரே மாதிரியாகத்தானே இருக்கும்.

கிருஸ்து மதத்தின் உயர் நிலைகள் போன்றவை பல இருந்தாலும் 'இறையருள்' என்பது ஓர் அற்புதமாகும். இந்த அற்புதம் கிருத்துவ மதத்திற்கு மட்டும் அமைந்ததல்ல எல்லா மதங்களிலும் இந்த அற்புதம் உண்டு.

'இறைவனுடைய அருள்' என்பதை எவ்விதம் மெய்ப்பிப்பது?

கடவுளின் ஆவேசம் வந்து ஆடும் ஒருவன், தன்மேல் தேவன் ஆவேசம் வந்து ஏறிக் கொண்டது என்பதை எப்படி அறிய முடியும்?

மேலும் அவனை ஆண்டவன் எதையோ எழுதத் தூண்டினான் என்று கூறி எழுதினாலும், அவனுக்கு முழுக்க முழுக்கப் புதியதாயிருந்த கருத்துக்களையும், உண்மைகளையும் அவன் வெளியிட்டதாக வைத்துக் கொண்டாலும், அவனுக்கு அதற்கு முன் ஒரு சிறிதும் தெரியாதவிஷயங்களைப்பற்றி எடுத்துரைத்தான் என்றாலும் நாம் எப்படி ஒத்துக் கொள்ள முடியும்? ஆதியில்லாத அந்தமற்ற ஒரு பரம்பொருள் தன் மீது ஏறிக்கொண்டு இருக்கிறது என்று அவனால் எப்படி தெரிந்து கொள்ள முடியும்? இந்த விஷயத்தை அவன் மட்டும்தான் அறிவான்


**இங்கர்சாலின் நூல்கள்**

| | |
|---|---|
| வால்டையர் | 1—0 |
| மூடநம்பிக்கை | 1—0 |
| மதங்கள் | 1—0 |
| அறியாமை | 1—0 |
| உண்மை | 1—0 |
| கோயில்கள் | 1—0 |
| கடவுள் | 1—0 |
| மக்கள் உரிமை | 1—0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0—8 |

கலைமன்றம், சென்னை-1.

என்று பேசுவதானால், மற்றவர்களை அவன் எவ்விதம் நம்பும்படிச் செய்ய முடியும்?

இறை அருள் என்றால் என்ன?

இறை அருளைப் பெற்றவன் இறைவனின் எண்ணங்களையே கொண்டவனா?

இல்லையென்றால், அவன் கடவுளின் கைக்கருவிபோன்றவனா?

அதுவுமில்லையென்றால் அந்த ஆண்டவனின் அருள் பெற்றவனின் தோற்றம், அவன் பெற்றுச் செல்லும் அருள்வாக்குகளை மிகைப்படுத்திக் கூற உதவுகிறதா?

அல்லது அவன் தன் அறியாமையை கடவுளுடைய சேதிகளுடன் கலந்து கொள்ளுகிறானா?

இல்லையென்றால் அவன் தன் குற்றங்களையும், வெறுப்புகளையும், கடவுளுடைய அன்போடும், நீதியோடும் கலந்து விடுகிறானா?

தானாகவே இறந்து விட்ட மிருகத்தின் இறைச்சியை உண்ண வேண்டாம் என்று கடவுள் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தால், முதல் முடிவில்லாத அதே கடவுள் அந்த மாமிசத்தை வேலைக்கு வரும் அந்நியன் ஒருவனுக்கு விற்கும்படி அவனிடம் கூறுவாரா?

ஒருவன் தன்மீது இறைவன் அருள் வந்து விட்டதாகக் கூறிக் கொள்ளுகிறான். கடவுள் தன் கனவில் தோன்றினார் அதைச் சொன்னார் இதைச் சொன்னார் என்று கூறுகிறான். கடவுள் அவனிடம் கூறியவைகள் நல்லதாகவும், அறிவு நிறைந்ததாகவும் இருக்கலாம், ஆனால் அந்த விஷயம் நல்லதாகவும் அறிவு நிறைந்ததாகவும் இருந்ததற்காக அது இறைவனின் அருள் வாக்கு என்று கூறுவது சரியாகுமா?

இதைப்போலவே கடவுளின் அருளால் வெளியிடப்பட்ட விஷயங்கள் ஆபாசமாகவும், கொடுமையுள்ளதாகவும் இருந்தால் அந்த மனிதன்மீது கடவுள் ஆவேசம் தோன்றவில்லை, யென்று தீர்மானித்து விடலாமா?

ஆவேசக்காரர்கள் கடவுள் அருள் வாக்கு மூலம் வெளியிடப்படும் விபரங்களை வைத்துத்தான் நாம் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமா? அல்லது நம்முடைய பகுத்தறிவின் துணை கொண்டு நல்லதொரு

[5-ம் பக்கம் பார்க்க]

# நாடு பிரிவதனால் ஏற்படும் நன்மைகள்

நாட்டுப் பிரிவினை நாட்டவரின் நெஞ்சிலே சிந்தனை அலைகளை மோதவிடும் பிரச்சினை. சீற்றத்தின் உச்ச நிலையை சுயநலப் பிரியர்களின் இதயத்திலே பீறிடவைக்கும் செயல். பிரிந்த நாடு வாழ முடியுமா எனும் கேள்வி சந்தேக வாதிகளிடத்தே தோன்றுகிறது.

வெவ்வேறு சகோதரர்களிடையே துளிர்விடும் அபிப்பிராய பேதங்களால் உருவாகும் வீட்டுப் பிரிவினையைப் போலவே, வெவ்வேறு நாகரிக, கலாச்சார இனங்களிடையே பாகுபாட்டை ஏற்படுத்துவது நாட்டுப் பிரிவினை. பலங்குன்றிய மனிதனின் தனிமை வாழ்விலே ஐயப்பாடு ஏற்படுவது இயற்கை. ஆயின்வளம் பொருந்தியவனின் வாழ்க்கைபற்றிய சந்தேகம் எழுப்புவதில் ஏதாவது பொருத்தமுண்டோ? வீரத்திலே, விவேகத்திலே வீழ்ச்சியடைவதையே வாடிக்கையாகக் கொண்ட நாடுகள் தனித்து வாழமுடியாதுதான். ஆனால் தனித்து வாழ்ந்து தைரியத்தின் ஆணிவேராக இருக்கும் நாட்டிலே வாழமுடியாத பிரச்சனைக்கு ஏது இடம்?

கிணற்றிலே அலையும் விரால் சிறு மீன்களை விழுங்குவதுபோல, பல இனங்கள் ஒரு நாட்டிலே வாழும்போது, சூது, சூழ்ச்சியிலே சிறந்த இனம் மற்ற இனங்களை அடிமையாக்கி ஆனந்தமாக வாழ்ந்து கொள்வது இயற்கை. அதை எதிர்ப்பதும் இயற்கையே!

இனவழியில் நின்று குணமான ஆட்சியை அமைப்பதற்கு நாட்டுப் பிரிவினை நல்லதோர் வாய்ப்பு!

மொழி, விழிபோல பாதுகாக்கப் படுவது உலக இயல்பு. வேற்று மொழிகளின் ஆதிக்கத்தால்சொந்த மொழியின் சுகந்த நிலை மடிய ஆரம்பிக்கின்ற தென்றால் அந்நாடு சுடுகாடாக மாறுகிறது என்று தானே அர்த்தம். தன் மொழி, தன் ஆட்சி, தன் நிர்வாகம் என்கிற நிலை ஏற்பட்டால் மாத்திரமே தன் மானமும் உண்மையான மக்களாட்சியும் ஏற்பட முடியும்!

ஒரு நாட்டின் வளமும், விளைவும் வேற்றவர்களால் அபகரித்துச் செல்லும் சுரண்டல் தத்துவம் நீடித்துக் கொண்டே சென்றால் வளமான நாடு விரைவில் வறண்டதாகி விடுமல்லவா? சொந்த நாடு சோபித மிழந்து தவிக்கும்போது, வந்த நாட்டின் வாழ்வு செழித்தோங்கும் வெட்கக் கேடான நிலைமையை எந்த நாடும் அனுமதித்துக் கொண்டிருக்காது.

மொழியிலே, கலையிலே, பொலிவான பொருளாதாரத்திலே, நல்ல ஆட்சியிலே நாடு சிறப்படைய வேண்டுமென்றால் கண்டிப்பாக "நாட்டுப் பிரிவினை" தேவை! தேவை!

என். இராமனாதன்
மதுரை

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற உயரிய இலட்சியம்" நடைமுறையிலே காண்பது, "நாடு பிரிந்தால்" தான்!

மத மூடநம்பிக்கைகளில் மூழ்கி மந்தப்புத்திக்காரர்களாக இருக்கும், நம் இனத்தவர், அனைவரும், "மறுமலர்ச்சிப் பாதை"யில், செல்லுவதும் "நாடு பிரிந்தால்" தான்!!

பகல் இரவென்று பாராமல், பாடுபடும் "பாட்டாளி சமூகம்" வாழ்வில் வளம் பொங்கி, வறுமையில், வாடாதிருப்பதும், "நாடு பிரிந்தால்" தான்!!

உழைப்பவன் ஒருவனும், ஊதியம் பெறுவது மற்றொருவனுமாக இல்லாமல் செய்வதும், "நாடு பிரிந்தால்" தான்!! உண்மையான ஜனநாயகம், உதயமாவதும், "நாடு பிரிந்தால்" தான்!! பொது மக்களை, பணத்தைக் காட்டியும், பல்லிளித்தும், பயமுறுத்தியும், (தேர்தல் காலத்தில் மந்திரி) "பதவி வேட்டை" யாடாமல், மக்களுக்காக, மக்களால், தேர்ந்தெடுக்கப்பட்ட, மந்திரிகளால், ஆட்சி நடைபெறுவதும், "நாடு பிரிந்தால்" தான்!!

திராவிடத்தில், அளவுக்கு அதிகமாக, "உற்பத்தி" இருந்தும், அதை அனுபவிக்க முடியாமல், 'அந்நிய நாடு' சென்று, "கைக் கூலி களாய், அதிகார மிரட்டலுக்கு ஆளாகி, அவதிப்பட்டு, (தன்) மானமிழந்து வாழ்வது மறைந்து, சொந்த நாட்டிலே உழைத்து, சுபீட்ச வாழ்வு வாழ, நமது உழைப்பின், பயனை நாமே அனுபவிப்பதும், "நாடு பிரிந்தால்" தான்!!

மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு, முட்டுக்கட்டையாக இருக்கும், "சமூக சட்டதிட்டங்கள்" தகர்த்தெறியப் படுவதும், நாடு பிரிந்தால் தான்!!

"பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே வெள்ளைப் பறங்கியைத் துரை என்ற காலமும் போச்சே" என்ற "அமரகவி பாரதியாரின் இலட்சியம் ஈடேறி, "எல்லாம் அவன் செயல், அவனன்றி அணுவும் அசையாது" என்ற போலி சித்தாந்ததைக் கூறி, ஏய்த்துப் பிழைக்கும் கூட்டம் இல்லாதிருப்பதும், "நாடு பிரிந்தால்" தான்!!

"தாய் மொழிக்காகப் போராடிய வீரர்கள், தன்மான மிழந்து வாழாமல், தரணியோர் போற்ற வாழ்வதும், 'சிந்தனைச் செல்வங்களை, சித்திரவதைக் குள்ளாக்காமலும், சிறையிலே தள்ளாமலும், உழைப்பாளியின் சிரமம், குறைக்க, ஓயாது, சிந்தித்து வரும், "விஞ்ஞானி"களுக்கு, ஊக்கமளித்து, உற்சாகமூட்டி, மக்களின் நல்வாழ்வில் அக்கரை செலுத்துவதும், அரசாங்கம் ஏற்படுவதும், "நாடு பிரிந்தால்" தான்!!

சுருங்கக் கூறின், உலக நாடுகளுடன், "திராவிடத்தை" ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உயர்ந்த நிலை நமது திராவிடம் எய்த வேண்டுமானல், அதுவும் "நாடு பிரிந்தால்" தான்!!

"நாடு பிரிந்தால்" ஏற்படும் நன்மைகளை, நமது "ஏடுகள்" விளக்கி, விளக்கி, எழுதியும், இன்னும், "அய்யோ, நாடு பிரிந்தால் ஆபத்து" எனக் கூறுபவர் இன்னும் இருக்கிறார்களே? என எண்ணும்போது உண்மையிலேயே வருந்தாமல் இருக்க முடியாது!! எந்த விதத்தில் ஆபத்து என விளக்கினல், நாம் வாதாட தயாராயிருக்கிறோம், ஆபத்து இல்லை நன்மை என்பது பற்றி! ஆனல்... நேருக்கு நேர் பேச முடியாமல், மறைந்திருந்து கழகத் தொண்டர்களைத் தாக்கி, நமது கொள்கைகளை, நசுக்கி விடலாம் என பகல் கனவு காண்கிறார்கள். அதே நேரத்தில் நாமும் எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தால் நம் திராவிடத்தாய் ஈன்றெடுத்த செல்வங்கள் தானே அழியும்? என எண்ணி, "எதையும் தாங்கும் இதயம் உண்டு" என்ற எண்ணத்தால், தாக்குதல்களையும் பொறுத்துக் கொள்ளுகிறோம். நமது திராவிடத் தாயின் கைகளில் மாட்டிஇருக்கும், விலங்குகள் சிதற, அயல் நாடு சென்று ஏங்கும் நம் அருமைத் தோழர்களை வரவேற்க நம் நாடு நிச்சயம் விரைவில் பிரியத் தான் வேண்டும்?

S. வள்ளிநாயகம்
இலங்கை

விதி, விதி யென்று நம்பி தன் வாழ்க்கையே வீணாக்கிக் கொண்டு இருந்த இந்த மனித சமுதாயம் முன்னேற வேண்டுமானல் திராவிட நாடு தனியாகப் பிரிந்தாக வேண்டும்.

மக்களை மாக்களாகக் கருதி மதத்தின் பெயரால் மடமையைப் புகுத்தி அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆணவம் அழியவேண்டுமானல் திராவிட நாடு தனியாக பிரிந்தாகவேண்டும்.

அறிவு என்னும் ஆலவிருக்ஷத்திற்கு சிந்தனை யென்னும் தண்ணீரைச் சிறிது நேரத்திற்கு ஒரு முறை ஊற்றி அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வேண்டுமானல் நம் திராவிட நாடு தனியாகப் பிரிந்தாகவேண்டும்.

நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, நம் மக்கள் நற் கல்வி பயில, இடைவிடா இன்பத் தென்றல் வீச; இது கண்டு நாம் மகிழவேண்டுமானல் நம் திராவிட நாடு பிரிந்தாகவேண்டும்.

மடாதிபதிகளிடத்திலும், மகேஸ்வரன்கள் சன்னிதானத்திலும், பதிங்கிக்கிடக்கும் பணமும் நிலமும் பாமரமக்களுக்கு உதவவேண்டுமானல் நம் இன்பத் திராவிட நாடு திராவிடருக்கே கிடைக்கவேண்டும்.

செல்வராஜு செங்கோட்டை

## நான் ஏன் நாத்திகன்?

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

முடிவைக் கண்டு படிக்க வேண்டுமோ?

இறைவனிடமிருந்துதான் தனக்கு அருள் வாக்கு கிடைத்தது என்பதை ஆவேசக்காரன் எப்படி அறிய முடியும்?

கடவுள் ஒருவன் முன் உண்மையிலே தோன்றினாலும் தன் முன்னர்த் தோன்றிய உருவம் தான் யார் என்று அம்மனிதன் எப்படி அறிய முடியும்? எந்த ஆதாரங்களால் இவர்தான் இறைவர் என்று உணர முடியும்? இது விஷயமாக மனிதனுக்கு எந்த ஒரு சிறு அனுபவமும் கிடையாது.

தேவர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதனை உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அவர்களைத் தெரிந்து கொள்வதற்கு மனிதன் தெய்வீக ஞானத்தைப் பற்றிப் போதிய பழக்கமில்லாதவனுயிருக்கிறான். ஆயிரக் கணக்கானவர்கள் தேவர்களிடமிருந்து அருள் வாக்குகளைப் பெறுவதாகப் பாசாங்கு செய்கிறார்கள் ஆனல் அவைகளில் எதுவும் மனிதனின்கற்பனைக்கு மேற் போனதாகவே இல்லை.

இறையருள் பெற்ற நூல்களில் காணப்படுவதைப் போலவே அவனுடைய அருளைப் பெறாத நூல்களிலும் வியப்பை விளைவிக்கும் விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஜூடன் தீர்க்க தரிசனங்களைப் போலவே பலமதத் தீர்க்க தரிசனங்களும் நிறைவேறியிருக்கின்றன.

ஆவேசம் வந்து ஆடுபவனுக்கு தன்னை ஆவேசம் பிடித்தாட்டுவதை அறிய முடியவில்லை யென்றால், அவன் தன் ஆவேசத்தை மற்றவர்களுக்கு எவ்விதம் நடத்திக் காட்ட முடியும்?

தேவன் அருள்: இது ஒரு அதிசயம் அதைப்பற்றி ஆவேசக்காரர்களுக்குத்தான் சிறிது தெரியும் அவர்கள்தான் ஏதாவது ஓரிரு சாட்சியங்களைத்துணைக்கழைக்கமுடியும்? ஆனல் இந்த அறிவும் அவர்கள் கூறும் சாட்சியமும், ஆவேசக்காரனையே பூரணமாய் திருப்தி பண்ணும் இயல்புடையவையாயிருப்பதில்லை. இதுவே ஆவேச விஷயத்தைப்பற்றிக் கூறும் கடைசி விளக்கம்.

குறுந்தொகைக் காட்சி

இலக்கியப் பகுதி

# மலரும் மாலையும்

கோ. பரசுராமன்

மாலைக்காலம். ஆம்! இச் சொல்லைக் கேட்டவுடன் மாலை நேரத்தின் அழகிய காட்சிகளும் இன்ப நினைவுகளுந்தான் நம் மனக்கண் முன் தோன்றி மறையும். மேல் வானத்தை நோக்கி விரைந்து செல்லும் ஞாயிறு; ஞாயிற்றை இறுகக் கட்டியணைத்துத் தன் செவ்வதரங்களால் முத்தமிடும் மேலைவானம்; இக் காட்சி கண்டு நாணத்தால் குவிந்து கொள்ளும் ஆம்பல் மலர்; வண்ணக் கதிர்கள் பட்டு மின்னும் நீர் நிலைகள்; புள்ளினங்கள் எழுப்பிச் செல்லும் பண்ணொலி; மலர்களின் மணத்தைத் தாங்கி வரும் மந்த மாருதத்தென்றல்; சிந்து பாடிச்செல்லும் சிற்றாறு... இவைபோன்ற எத்தனையோ எழிலுறு காட்சிகள்!

'மையன்மாலை' என்றவுடன் மேற்சொன்ன கவினுறு காட்சிகளைத்தான் பெரும் பாலோருடைய மனம் எண்ணி மகிழும். மாலை நேரங்கண்டு மனங்கலங்கும் உயிர்களும் எவ்வளவோ என்று எண்ணுபவர்கள் பலரல்ல; மிகச்சிலர்தான், அவர்கள்தான் மாலைக் காலத்திற்கும் மனிதனுடைய வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறுபவர்கள். 'மாலைக்காலம் மக்களுடைய மனத்திற்கேற்ற முறையிலே பல்வேறு கோணங்களிலே தோன்றும். மகிழ்ச்சியையும் துயரையும் இன்ன-பலவற்றையும் மாற்றித்தரவல்லது. வாழ்க்கையும் அப்படித்தான்! மக்களுடைய மனத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற முறையிலேதான் வாழ்க்கையைப் பற்றிய எண்ணமும் உருவாகிறது. ஒரு சிலருக்கு வாழ்க்கை இனிப்பாகவும் பலருக்குக் கசப்பாகவும் இருக்கிறது. வாழ்க்கை சிலருக்குப் பொழுது போக்காகவும் பலருக்கு போராட்டமாகவும் இருக்கிறது. சிலருக்கு வாழ்க்கை ஒரு சிறந்த காவியமாக இருக்கிறது. மற்றும் சிலருக்கு அது இனிய கனவுகள் நிறைந்தாகத் தோன்றுகிறது. எனவே மாலைக் காலமும் வாழ்க்கையைப் போன்றதுதான்' என்றுதான் அவர்கள் விளக்கி கூறுவர்.

மாலைக்காலம் மகிழ்ச்சியைப் போல் மனக் கலக்கத்தையுந் தரவல்லது. மாலைக் காலங்கண்டு மனங் கலங்கும் உயிர்களும் எவ்வளவோ? மேய்ச்சல் தரையினின்றுத் திரும்பி வரும் பசுவும் தன் இளங்கன்றை நினைத்துத்தான் ஓடோடியும் வருகின்றது. கழனியிலே நாள் பூராவும் உழைத்துத் திரும்பும் உழத்தியும் தொட்டிலிலே தான் கிடத்திச் சென்ற மாணிக்கத்தை நினைத்துத்தான் வேகமாக வருகிறாள். வான வீதியிலே பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களும் தம் குஞ்சுகளை நாடித்தான் விரைகின்றன. இதே போன்று மாலைக்காலத்தில் இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள்...

மாலைக்காலம்! மணாளனுடன் கூடியிருக்கும் மங்கைக்கு மதுரமொழி பேசும் நேரம், மகிழ்ச்சிக் கடலிலே திளைத்து மயக்க முற்றிருக்கும் காலம். ஆனால் தலைவனைப் பிரிதிருக்கும் தலைவிக்கோ "கொலைக் களத்தே திலர் போல வரும்" கொடிய காலம். பாலையினுங் கொடிய வெம்மை பயக்கும் நேரம். இத்தகைய மாலைக் காலம் சூழ்நிலைக்கும் மனத்தின் நோக்கிற்கும் ஏற்ற முறையிலே தான் தீமையையும் பயக்கும். அன்புடை நெஞ்சங்கள் கலக்கும்போது அமுதத்தினும் இனிமை பயக்கும் மாலை பிரிவெனுங் கொடுமையால் வருந்தும் போது நஞ்சினுங் கொடிதாய்த் தோன்றுகிறது.

o o o

தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கின்றாள் தலைவி. மேலை வானத்தின் வண்ணக் கோலங்கண்டு தன் துயரை ஓரளவு மறந்திருக்கின்றாள். மாலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் நீர்நிலைகளில் பட்டுப் பிரதிபலிக்கின்றன. இவ்வினிய காட்சி அவளுடைய மனத்தைக் கொள்ளை கொள்கிறது. நீர்நிலைகளைக் கண்டவள் அங்கே முளைத்துக் கிடக்கும் ஆம்பல் மலர்களைக் காண்கின்றாள். ஆம்பல் மலர்களெல்லாம் குவிந்துவிட்டன. ஆம்பல் குவியின் மாலை வந்த தென்றல்லவா பொருள்! மாலைவரின் பின்னர் கங்குலுந் தொடர்ந்து வரும். இம் மாலையையும் கங்குலையும் அவள் எங்ஙனம் கழிப்பாள்? பிரிவுத்துயர் ஆற்ற முடியாத தாயிற்றே?

தலைவி கூறுகின்றாள்:—

'ஆழமாகிய நீர்நிலைகளில் ஆம்பல் மலர்கள் வளர்ந்து கிடக்கின்றன. பைங்காற் கொக்கின் புன்புறத்தைப் போன்று விளங்கும் இவ்வாம்பல் மலர்களும் குவிந்தன. குவிந்த ஆம்பல் மலர் மாலைக்காலம் வந்ததை அறிவுறுத்துகிறது. இம்மாலைக் காலம் வாழட்டும்! இவ்வாறு வந்து எனக்குத் துயர்தருவது இம்மாலைக் காலம் மட்டுமல்ல; இதன் பின்வரும் யாமத்தையும் உடையது. இனி என் செய்வேன்' எனக் கூறி வருந்தியிருக்கின்றாள்.

ஆம்பல் மலர் குவிந்ததும் தலைவிக்கு மாலையைப் பற்றிய எண்ணம் தோன்றுகிறது. மலரும் மாலையும் அவளுடைய மனத்திலே ஏற்படுந்திய எண்ண அலைகளைச் சித்தரிக்கும் சொல்லோவியம் இதுதான்.

''பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டு நீராம்பலுங் கூம்பின வினியே
வந்தன்று வாழியோ மாலை
ஒரு தானன்றே கங்குலு முடைத்தே''

—ஓரம்போக்கியார்

குறுந்தொகை-122

[பசுகால் கொக்கின்: பசியகால்களையுடைய கொக்கினது, புல்புறத்து அன்ன: புல்லிய புறத்தைப் போன்ற, ஆம்பலும் கூம்பின: ஆம்பலின் மலர்களும் குவிந்தன, கங்குலும் உடைத்து: யாமத்தையும் உடையது.]

திண்டுக்கல்லில்
'கலைமன்றம்'
கிடைக்குமிடம்:
த. தசரதன்
நியூஸ் ஏஜண்ட்
மெயின் ரோட் திண்டுக்கல்

படித்து விட்டீர்களா...?

# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ்

ஆசிரியர்: பால்வண்ணன்

அழகான முகப்பு

**40 - பக்கங்கள் விலை அணா நான்கு**

- தொடர் கதை தரும் சுவை ;
- சிறுகதைகள் தரும் இனிப்பு ;
- ஆராய்ச்சிகள் தரும் ஆனந்தம் ;
- கட்டுரைகள் வழங்கும் களிப்பு ;
- பெண்கள் பகுதி தரும் பெருமை ;
- சிறுவர் பகுதி தரும் சிறப்பு ;
- விஞ்ஞானம் விளைவிக்கும் விசித்திரம் ;
- தலைவர்களின் வரலாறுகள் தரும் தெளிவு ;

இவ்வளவும் நிறைந்த மக்கள் விரும்பும்

**குடும்பப் பத்திரிகை!**

விபரங்களுக்கு :

**கலைமன்றம்**

P. B. NO. 275 :: சென்னை-1

# தி. மு. க. ஒரு பருவ மங்கை

## தஞ்சை அரசியல் மாநாட்டில் அண்ணாவின் அறிவுரை

அன்புள்ள தலைவர் அவர்களே, அருமைத் தோழர்களே இரண்டு நாட்களாக நடைபெற்று வரும் தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு முடியும் தருணத்தில் உள்ளது. என்னுடைய பேச்சுடன் இம்மாநாடு முடிவுக்கு வரும்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு மாநாட்டை நடத்துவதென்றால் மிகச் சுலபம்.

ஒரு மிராசுதார் பந்தலுக்கு வேண்டிய ஓலைக் கீற்றுக்கள் தருவேன் என்பார். மற்றொரு மிராசுதார் வருகின்ற தலைவர்களை நம் மாளிகைக்கு அனுப்புங்கள் என்பார் மற்றொருவர் 1000, 2000 என நன்கொடை தருவார். எனவே அவர்கள் மாநாடு நடைபெறுவது சுலபம்.

தஞ்சை மாவட்டம் சுயமரியாதை இயக்கத்தின் தொட்டிலாக இருந்தது. தஞ்சை மாவட்டம் மிகவும் வளம் பொருந்தியது என்றால் இங்கு உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களைக் குறிக்கவில்லை இம்மாவட்டம் இயக்க வளர்ச்சியின் பேருழைப்புக்காக தந்த இலட்சிய வீரர்களைத்தான் குறிப்பிடுகின்றேன். தி. மு. கழக மாநில மாநாடுகளும் கூறும் செய்தி திராவிடநாடு திராவிடருக்கே என்பதுதான்.

பதவியிலிருந்த அன்பர் ஆச்சாரியார் விலகி விட்டார். அந்த இடத்திற்கு காமராசர் வந்துவிட்டார். தி. மு. கழகம் என்ன சொல்கிறது? களிப்படைகிறதா கவலைப்படுகிறதா என்று பலர் கேட்டனர். நம்முடைய கழகம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. இடையிலே வரும் மந்திரிசபை மாற்றங்கள், நீண்ட கால திட்டத்தை திராவிட நாட்டுப் பிரச்னையை இம்மியளவும் மாற்ற முடியாது, எனக்குத் தெரிந்த வரையில் ஆச்சாரியார் சென்று காமராசர் வந்தது மகான் போனார். மனிதர் வந்தார் என்பதுதான். அந்த மனிதர் நல்லவரா கெட்டவரா நாமறியோம். அவருக்கே தெரியாது அனுபவம் இல்லாத காரணத்தால்! ஆகவே அந்த மனிதர் எப்படிப்பட்டவர் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். முதலமைச்சராக ஆச்சாரியார் பதவியேற்றதும் திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் நாஸ்திகப் பிரச்சாரம் செய்கின்றன என்று பிரச்சாரம் செய்



தால் மக்கள் மதிப்பை இழந்துவிடும் என மனப்பால் குடித்தார் ஆச்சாரியார்.

இராமாயணக் கதையைப் போல ஆச்சாரியார் அவருடைய பதவியை அவரே விட்டுவிட்டு, அவருடைய மலபார் போலீசை விட்டுவிட்டுச் சென்றார். உண்மையிலேயே ஆச்சாரியார் சென்றது இந்நாட்டிற்கு ஒரு விடுதலை நாள்தான். ஆச்சாரியார் சென்றுவிட்டார் காமராசர் வந்துவிட்டார். தஞ்சைத் தரணியிலே கூடியிருக்கிற நாம் இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தழுவியுள்ளோம்.

ஆச்சாரியார் என்றால் அது பெரியார் கட்சி. காமராசர் என்றால் அது அண்ணாதுரைக் கட்சி என்று பலர் நினைக்கின்றனர்.

உண்மையிலேயே நான் அவர்களுக்கு ஒன்று கூற நினைக்கிறேன். இதுவரையில் நான் காமராசரை படத்தில் பார்த்ததுதான் நேரில் பார்த்தது கிடையாது. ஆச்சாரியாரைப் பார்த்திருக்கிறேன். ஏன் அவருடைய தலைமையில் பேசியுள்ளேன். சென்னை ஒய். எம். சி. எ.வில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஆச்சாரியார் அழைக்கப்பட்டார். அந்த நிகழ்ச்சி பூஜை, பாராயணம் முதலியவற்றோடு ஆரம்பமாயிற்று. அக்கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். அந்நாட்களில் என்னை அதுபோன்ற கூட்டங்களில் பேச அழைக்கவும் மாட்டார்கள். நான் சென்றால் மறுக்கவும் மாட்டார்கள். நான் "இதைப் போல் பூஜை முதலியவை செய்து ஆரம்பமாகும் நிகழ்ச்சி அறிவு நிறைந்ததா" என்று பேசிக்கொண்டிருக்கும்போது ஆச்சாரியார் என்னைப் பிடித்து இழுத்தார். உடனே நான் "உம்முடைய மகளை கலப்பு மணம் செய்து கொடுத்தீரே அது எந்த ஆகமத்தில் இருக்கிறது" என்று கேட்டேன் உடனே அவர் **"Don,t talk personal matters"** (சொந்த விஷயங்களைப் பேசாதே) என்று கூறினார். உடனே நீங்கள் பொது சொத்தாக மாறிவிட்டீர்கள். தங்கள் வாழ்வை பொதுப் பணிக்கு ஒப்படைத்து விட்டதால் உம்மைப் பற்றி பேச பொதுமக்களுக்கு உரிமையுண்டு" என்று கூறினேன்.

ஆனால் நான் காமராசரை இதுவரையிலும் பார்த்ததில்லை. ஆச்சாரியாரோ சிகப்பு, பெரியாரும் சிவப்பு. காமராசரும் கருப்பு, நானும் கருப்பு. அதனால் இப்படி கட்சி பிரித்திருக்கிறார்களோ அறியேன். காமராசர் மந்திரி பதவி ஏற்றது பற்றி தற்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. தி. மு. க. ஒரு பருவ மங்கை. பருவ மங்கை சிரித்தால் சாகஸம் என்பார்கள். மாடியிலே நின்றால் வீதியிலே செல்வது

# துணைக்கழைப்போரே, வளர்ச்சியை எண்ணுங்கள்!

யார் என்பார்கள். அலங்காரம் செய்து கொண்டால் தளுக்குக்காரி என்பார்கள். எனவேதான் பொறுப்பற்ற முறையில் வார்த்தையைக் கூறக்கூடாது. தி. மு. கழகத்தின் குணம் தங்கத்தைப் புடம் போட்டால் குறையாததைப் போன்றது.

தி. மு. கழகத்தை துணைக்கழைக்கும் யாராயிருப்பினும், எந்தக் கட்சியினராயினும் கழகத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு அழைக்க வேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கையும் அதற்கான வழி முறைகளும் உண்டு. எனவே தி. மு. கழகத்தை துணைக்கழைப்பவர்கள் இதை மறந்துவிடக் கூடாது.

திராவிட கழகத்தார் பிள்ளையார் உடைப்பதில் நம்பிக்கை இருக்கிறதென்றால் தாராளமாகச் செய்யட்டும். ஆனால் தி. மு. கழகத்தினர் பிள்ளையாரையும் உடைக்கமாட்டார்கள். பிள்ளையாருக்குத் தேங்காயையும் உடைக்க மாட்டார்கள். எனவே அவரவர்களுக்குள்ள எண்ணப்படி உறுதியுடன் பணியாற்றுவதை விட்டு, தொட்டதற்கெல்லாம் உங்கள் முடிவு என்ன என்று நம்மைப் பார்த்து அதுவும் அவர்களாகவே முடிவு செய்துகொண்டு செயலில் இறங்கிவிட்டு எங்கள் முடிவு என்ன என்று கேட்பது முறையுமாகாது. பொதுப் பணியில் இருக்கவேண்டிய நீதிக்கும் ஏற்றதாகாது.

பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டுமென்பது அவர்களுடைய பழமை வெறியைத்தான். நம்முடைய கழகத்தில் பார்ப்பனர்களை நாம் சேர்த்துக் கொள்கிறோம் என்றால் எப்படி? பூணூலை அறுத்தெறிய வேண்டும். நெஞ்சிலே வஞ்சகம் கூடாது. ஆகமம் முதலானவை அழிக்கப்பட வேண்டும். எந்த பார்ப்பனன் திராவிட நாட்டை ஒப்புக்கொள்கிறானே அவனைச் சேர்த்துக்கொள்கிறோம். பார்ப்பனன் நம் கூடாரத்திற்கு வந்தால் அவன் பார்ப்பனன் இல்லை. இன்னும் 2 ஆண்டுகள் கழித்து பெரியார் ராமசாமியும் இதையே தான் கூறுவார்.

இத்துறையில் பெரியார் ராமசாமி செய்து வரும் சேவை இன்னும் மும்முரமாக வேண்டும். இதனால் பார்ப்பனர்கள் மீது தனிப்பட்ட வெறுப்பு பெரியார் ராமசாமிக்கு இருப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது. அவர்கள் பக்கம் மிரட்டல் இருந்தால் நம் பக்கம் வரவேற்பு இருக்கவேண்டும்.

உலக யுத்தத்தின்போது Screeching bomb என்றொரு குண்டு போடப்பட்டது. அது கிளப்புகிற பெரிய சத்தத்தைக் கேட்டு மக்கள் உடனே தங்கள் வீடு, வாசல் முதலியவற்றைத் துறந்து தப்பித்துக் கொள்ள ஓடுவர். அந்தகுண்டு யாரையும் கொல்லாது. ஆனால் அது எழுப்புகிற சத்தமே மக்களை கிடுகிடுக்கவைத்துவிடும். அதைப் போல பெரியார் ராமசாமி



Screeching bomb போடுகிறார். உடனே பார்ப்பனர்கள் ஐயோ! ஆபத்து! ஆபத்து என்று ஓடுவார்கள். உடனே நாம் அவர்களைப் பார்த்து "ஆபத்தா வாருங்கள் இங்கே இதோ நாங்கள் இருக்கிறோம் ஆபத்சகாயர்கள் பூணூலைக் கழற்றுங்கள். ஆகமத்தை அகற்றுங்கள், உயர்ஜாதி ஆணவத்தை விடுக" என்று கூறி அவர்களை வரவேற்கலாம். ஆகவே பெரியாருடைய கிளர்ச்சி இன்னும் மும்முரமாக வேண்டும்.

என்னுடைய நண்பர்கள் பலர் கூறினார்கள். அண்ணா உங்களை வசைமொழிகளால் ஏசுகிறார்கள் திட்டுகிறார்கள் கருணாநிதியை கண்டவாறு தாக்கிப் பேசுகிறார்களே என்று. அவர்களுக்கெல்லாம் நான் கூறுவேன் ஒரு நாட்டைப் பெற இந்த வசவுகளைக் கூடவா தாங்கிக் கொள்ள முடியாது.

பெரியாருடன் நான் பணியாற்றி இருக்கும் போது அதாவது சேலம் மாநாட்டுக்குப்பின், நகர தூதன் ஆசிரியர் திருமலைசாமி அவர்கள் என்னைப்பற்றி தாறுமாறாக 6 பக்கம் எழுதினர். ஒரு நாள் நான் மாடியிலே இருந்தேன். உடனே பெரியார் ராமசாமி தள்ளாடிக்கொண்டே மாடி மேல் வந்து இதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது பொது வாழ்வில் ஒருவன் 40 வயதுக்குள் கேட்க வேண்டிய வசவுகளையெல்லாம் கேட்டுவிடவேண்டும் என்று ஆறுதல் கூறினர் மறக்கவில்லை நான் அந்த பாடத்தை ஒருவேளை பெரியார் ராமசாமி எனக்கு கற்கை கொடுத்த பாடங்களில் சிலவற்றை மறந்திருந்தாலும், இதை நான் மறக்கவில்லை. ஆகவே தோழர்களே ஏசுதலுக்கு நீங்கள் கவலைப்படவேண்டாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பொறுமை—கவசம் கண்ணியம்—கூர்வாள். கட்டுப்பாடு—கேடயம், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய முதற்பயிற்சி உள்ள உரம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றால் ஏளனத்தையும் சேர்த்துத்தான் தி. மு. க. ரத்தத்தை கேட்டது—நண்பர் ஜோசப் கொடுத்தார்.

நான் சென்னைக் கூட்டத்தில் கூறியபடி திராவிடநாடு பிரிந்தால் உணவு, உடை, இருக்க இடம் இம்மூன்று அடிப்படைத் தேவையும் கட்டாயம் அளிக்கமுடியும் உணவு, உடை, இருக்க இடம் இம்மூன்று விற்பனைப் பொருளாக இருக்காது. ரத்தத்தைக் குடிக்கும் புலிக்குக்கூட தங்க ஒரு குகை உள்ளது. நயவஞ்சகம் படைத்த நரிக்கும் தங்க ஒரு குகை உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் வியர்வையைக் கேட்டது, தொண்டர்கள் தந்தார்கள். கழகத்துக்காக உழைக்கும் நோக்கில் திராவிட முன்னேற்றக் கழகம் கண்ணீரைக் கேட்டது—கண்ணீர்த் துளிகளை

[அடுத்த பக்கம் பார்க்க]

# நம்முடைய முயற்சிகளை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது!


## 1960-ல் திராவிட நாடு காண்போம்

### தஞ்சையில் சம்பத் திறப்புரை

அன்புள்ள மாநாட்டு வரவேற்புக் குழுவினரே, பிரதிநிதிகளே, தோழர்களே, தாய்மார்களே கடந்த ஏழெட்டு மாதங்களாகவே தமிழ் நாட்டு அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நிறைய வேலைகள் இருந்ததென்பது உங்களுக்குத் தெரியும். ஆச்சாரியாரின் மந்திரி சபையை எல்லோரும் கண்டித்தார்கள், நாமும் கண்டித்தோம்.

மன அமைதி கெடக்கூடியவகையில் தேர்தல் புயல் வீசியபோது ஆச்சாரியார் அதில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இன்றைக்கு முதல் மந்திரியாயுள்ள காமராசர் உள்பட ஆச்சாரியார் முதல் மந்திரியாவதை வரவேற்றார்கள் அந்த நேரத்திலே இந்த நாட்டில் உள்ள எல்லோரும் அதை எதிர்த்தார்கள். பதவிக்கு வந்த ஆச்சாரியார் தன்னுடைய நாச வேலையைஆரம்பித்தார். அதனுடைய முதல் கட்டம்தான் புதிய கல்வித்திட்டம்என்பது. எவரையும் கேட்காமல், 'எனது எண்ணம் எனது விருப்பம், எனது நெடுநாளைய ஆசை' என்று அத்திய திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அந்தத்திட்டம்மிகமோசமானதிட்டம். நாசமான திட்டம். அது ஒழிக்கப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்ட்டுகள் கூறினார்கள்—சோஷலிஸ்டுகள் சொன்னார்கள். தமிழ் நாட்டு உழைப்பாளர்கள் கூறினார்கள். காங்கிரசில் உள்ள ஓமந்தூரார் காமராசர் முதலிய அனைவரும் எதிர்த்தனர். ஆனால் தி. மு. கழகம் ஒன்றுதான் செயலில் இறங்கியது. ஆகவேதான் ஆச்சாரியார் அந்த இடத்தில் இருந்து போய்விட்டார். காமராசர் வந்து விட்டார். நம் எதிரி தொலைந்து விட்டார்.



காமராசர் வந்து விட்டால் நம்முடைய அரசியல் பிரச்னைகள் தீர்ந்து விட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. காமராசர் ஆட்சிக்கு வந்தாலும் இன்றைக்கு அதை இயக்கிக் கொண்டிருப்பது யார் என்றால் வடநாட்டுக் கும்பல்தான். காமராசர் சட்டசபைக் கட்சி தலைவரானதும் நேராக—நேருவின் வீட்டிற்குச் சென்று என்னை எப்படியாவது முதன் மந்திரியாக்கி விடுங்கள் எனக் கெஞ்சினார்.

---

## அண்ணா பேச்சு

[முன் பக்கத் தொடர்ச்சி]

எண்ணிப் பார்த்துத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

ரேடியோ, வாசனை சாமான்கள் முதலியவைகளை தனிப்பட்ட முதலாளிகள் வைத்துக் கொள்ளட்டும். ஆனால் உணவு, உடை, இருக்க இடம் இம்மூன்றும் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்காது. ஆகவே தான் கூறுகிறேன், திராவிடநாடு பிரிந்தால் மககள் உணவு, உடை, இருக்க இடம் இம்மூன்றையும் கட்டாயம் பெறுவார்கள் என்று.

திராவிட நாட்டில்தான் உண்மைக் கடவுள் இருப்பார். எங்கு ஏழை மகிழ்ச்சியாக இருக்கிறானோ, அங்குதான் கடவுள் இருப்பார், திராவிட நாட்டில் ஏழை மகிழ்ச்சியாக இருப்பான். ஆகவே அங்குதான் கடவுள் இருப்பார்.

இந்தக் கருத்துக்களை எல்லாம் நீங்கள் பட்டித்தொட்டி தோறும் பரப்ப வேண்டும் எனக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

காமராசர் திராவிடர் ஆகையால் அவரை நாம் ஆதரிக்க வேண்டும் என்று கூறினால் தவறு. ஓமந்தூரார் உத்தமர் என்று நம்மாலே அழைக்கப்பட்டவர் அப்படிப்பட்ட ஓமந்தூரார் கும்பகோணத்திலே கொடுமை செய்தார். ஆச்சாரியாருக்கு நாம் கருப்புக்கொடி பிடித்த போது இதே உத்தமர் ஓமந்தூரார் தான் நம்மைத் தடியால் அடித்தார்.

காமராசர் மந்திரியாகிவிட்டால் புதிய கல்வித் திட்டம் எடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை இதே காமராசர் முதன் மந்திரியாய் இருக்கும்போது யாராவது ஒரு வடநாட்டான் நம்மை தாறு மாறாகப் பேசினால், அதை நாம் கண்டித்தால் இந்தக் காமராசர் சும்மா இருந்து விடுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியங்கள் சிலவற்றை காமராசர் மந்திரிசபை நிறைவேற்றக் கூடும். நம்முடைய லட்சியம் பொருளாதாரம், சமுதாயம், அரசியல் துறைகளில் சம்பந்தப்பட்டது.

டெல்லி சட்டசபையில் அமைச்சர் கட்ஜு அவர்கள் நம்முடைய பத்திரிகைகளைத் தாறு மாறாகப் பேசினார். அதேபோல பண்டித நேருவிற்கு நாம் நடத்திய கருப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. இந்த ஓராண்டு காலமாக தி. மு. கழகம் நடத்திய பல்வேறு நிகழ்ச்சிகளின் காரணமாக இந்நாட்டின் விடுதலைப் படை வீரர்களின் உருவம் அவர்களுக்கு நன்கு தெரிந்து விட்டது. எனவே நமக்கு இனிமேல்தான் பண்பாடு தேவை.

நாம் மக்களிடம் திராவிட நாடு பற்றிப் பேசினோம் வக்கீல்களைப் போல். நம்முடைய போராட்டங்களுக்கு மக்கள் தங்களுடைய ஒப்புதலை அளித்து விட்டார்கள். அண்ணா அவர்கள் மாநில மாநாட்டிலே திராவிட நாட்டுப் பிரிவினை நாள் 1960-ல் என்று அவருடைய ஆசையினால் பேசினார்கள். அதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொண்டால் கட்டாயம் 1960-ல் திராவிட நாட்டை அடையலாம். இந்த நிலைமையில் தான் நல்ல உறுதியும் பண்பாடும் தேவை.

நம்முடைய லட்சியம் என்ன? அரசியல் துறையில் திராவிடநாடு பெறுவது, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிப்பது. அடுத்து அதையொட்டி பொருளாதார சீர்திருத்தம் செய்ய வேண்டும். தென்னாட்டிலே முதல் முதல் பொதுவுடைமை பேசியவர்கள் நாம்தான். திராவிட நாடு மட்டுமல்ல நம்முடைய லட்சியம். சோஷலிஸ திராவிட நாடு நம்முடைய லட்சியம் என்பதை இந்நேரத்தில் கவனம் வைத்துக் கொள்ளவேண்டும்.

காங்கிரஸ் பல பெரும் போராட்டங்களை நடத்தியது. விடுதலை வீரர்களை பலிதந்தது. ரத்தக்காணிக்கை கொடுத்தது அவ்வளவு பெரும் போராட்டங்களை நடத்திய காங்கிரஸ் இன்று கேடுகெட்ட ஸ்தாபனமாக விளங்கக் காரணம் என்ன? காங்கிரஸ் அதனுடைய விடுதலைப் போரின் கடைசிக்கட்டத்தில் முதலாளிகளின் கையில் சிக்கி விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை, சீ இதுவும் ஒரு கழகமா? கட்சியா? என்று சொன்ன சீமான்களின் எண்ணிக்கை ஏராளம். அது பள்ளிக்கூட பையன்களின் கட்சி என்று கூறியோர் அனேகம்பேர். இன்று அவர்கள் எல்லாம் நம் மாநாடுகளுக்குத் தலைமை வகிக்கவும், ஊர்வலங்களை நடத்திச் செல்லவும் ஆசைப் படுகிறார்கள். இந்த நேரத்தில்தான் நாம் நம்முடைய நண்பர்கள் யார் விரோதிகள் யார் என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். விரோதிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் நண்பர்களின் படையெடுப்பை சமாளிக்க முடியாது.

நாம் நினைத்தால் 1960-ல் திராவிடநாடு தனியாக பிரியும், இதை நாம் தப்ப விட்டால் அடுத்த வாய்ப்பு 1970-ஆக இருக்காது, 2000-மாக இருக்குமோ இருக்காதோ தெரியாது. ஆகவே நாம் இந்த இறுதிக் கட்டத்தை தப்ப விடக்கூடாது.

ஓமந்தூரார் ஒரு மாநாட்டில் அண்ணாவைத் தனியே சந்தித்துப் பேசும்போது கூறினார், வடநாடு தென்னாடு வேற்றுமை மிகமோசம் என்று. இப்போது கூறுகிறார் மேல் சபையில் "விரைவில் வடநாட்டுக்கு தென்னாடு அடிமையாகி விடுமோ என்று சந்தேகப் படுகிறேன். இதையெல்லாம் கூறுவதால் நான் திராவிட இயக்கத்தை சேர்ந்தவனோ என்றுஐயப்படவேண்டாம்" என்று. எனவே நாம் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டோம். இந்தக் கட்டத்தில் சில்லரைக் குழப்பங்களை வளர்த்து இந்த அருமையான வாய்ப்பை இழந்துவிடக் கூடாது.

சில்லரைக் குழப்பங்களுக்கு தோழர்கள் செவி சாய்க்க வேண்டாம். தெருவிலே கார் ஓடும்போது ஒவ்வொரு நாயும் குலைக்கும். ஒவ்வொரு இடத்திலும் காரை நிறுத்தி நாய்க்குச் சமாதானம் கூறிக்கொண்டிருந்தால் நம் பயணம் தடைபட்டு விடும். குலைக்கிற நாய்கள் குலைக்கட்

(14-ம் பக்கம் பார்க்க)



கலைமன்றம்
திராவிடர் முற்போக்கு வார இதழ்... ஆசிரியர்: பால்வண்ணன்
சென்னை — 24—4—54 — சனி

# சேலம் அழைக்கிறது

சேலம் அழைக்கிறது 'சீர்திருத்தத்தை நாடிச் செல்லும் வீரர்களே வாருங்கள் என்று!' மனம் போன போக்கிலே அரசியல் சூதாட்டங்களில் கலந்து கொள்ளும் தலைவர்களைக் கண்டு நாணி நிற்கும் நம்மவர்களை நோக்கி 'வருக சேலத்திற்கு அரசியல் மாநாட்டில் நல்ல பல திட்டங்கள் தீட்டலாம்' என்று கூவி அழைக்கிறது. ஆகவே வீரர்களே! வீணர்களின் வீணான திட்டத்தை தூளாக்க-நல்ல பல திட்டங்களைத் தீட்ட வாருங்கள்!

சேலம்: சாதாரண சேலம் அல்ல செயலாற்றும் சேலம். முதல் மாநாட்டிலே இயற்கை செய்த சதியை வென்று வாகைமாலை சூடிய மாவட்டம் அது! ஆம்! புயல் வீசியது, ஆயிரக் கணக்கான மக்கள் அமர்ந்திருந்தனர். தாய்மார்கள் ஏராளம். மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. நடுப்பகல் ஆம்! மழை பொழிந்தது; புயல் வீசியது. ஆனால் மக்கள் கலையவில்லை. இதனைக் கண்டு பொறாத இயற்கைப் பந்தலைச் சாய்த்து விட்டது. பெரிய பந்தல் சாய்ந்து விட்டது, ஆனால் மாநாட்டு நிர்வாகிகளின் உள்ளம் சாயவில்லை. தொண்டர்கள் வீறு கொண்டெழுந்தனர். சாய்ந்த பந்தலை பத்து தினங்களுக்கு மேல் கஷ்டப்பட்டு உருவாக்கிய பந்தலை, சிலமணி நேரங்களில் தம் முயற்சியில் எடுத்து நிறுத்தி விட்டனர். அத்துடன் சேலம் மாவட்டத்தின் புகழையும் சேர்த்து நிலை நிறுத்தி விட்டனர். அத்தகைய செயல் வீரர்கள் கூடி செயலாற்றும் சேலத்தில் மாநாடு நடைபெறுகிறது.

கடமை யுணர்ச்சியும், கண்ணியமும் கட்டுப்பாடும் நிறைந்த காளைகளே! தோழியர்களே! வாருங்கள் வாருங்கள்!

பாட்டாளிகளின் விடுதலை விழாவான மே முதல் நாள் அன்று சமூக சீர்திருத்த மாநாடு நடைபெறுகிறது. அடுத்த நாள் அரசியல் மாநாடு நடைபெறுகிறது மாநிலமெங்கும் கூடியிருக்கும் பகுத்தறிவின் தூதுவர்களே வாரீர்!

பரசுராமன் பந்தலிலே வள்ளியப்பன் அரங்கிலே நமது தலைவர்கள் அமர்ந்து அறிவுரை நிகழ்த்தும் காட்சியைக் காணவாரீர், அவர்தம் வாய் மொழிகளைக் கேட்கவாரீர்!

சமுதாயத்தை சீர்திருத்தி—அரசியலிலே ஒரு புதுமையை உண்டாக்கி மக்களுக்கு நல்வாழ்வும், தேவையான வசதிகளும் தருவதற்காகவே பாடு படும் தி. மு. கழக முன்னணி வீரர்களே வாரீர்! அண்ணாவின் தலைமையிலே ஆயுத மேந்தாத—அழிவு வேலைகளை கனவிலும் கருதாத அறிவுப் படை வீரர்களே - வாரீர்! வாரீர்! உங்களை சேலம் அழைக்கிறது வாரீர்!

★

உலகம் போற்றும்
காதல் காவியங்கள்
"ஊடுருவி" எழுதியவை

காதல் கடலிலே குளித்து எடுத்த முத்து!
அழகான காவியம் !!

லைலா - மஜ்னு
விலை ரூ. 1—0—0

இந்நூலைப் பற்றி—
—கூடிய வரையில் தம் கற்பனைத் திறத்தால் இக் கதாசிரியர் இதனை ஒரு சிறு காவியமாக எழுதிவிட்டார். எழுதினது வசனமாக இருந்தாலும் சொல்லும் வர்ணனைகளைப் பார்த்தால் ஒரு செய்யுள் பிரபந்தத்தின் மொழி பெயர்ப்போ என்னும்படி வளம் பொருந்தி இருக்கிறது.
—சுதேசமித்திரன் 23-6-52

விபரங்களுக்கு:
கலைமன்றம்
P. B. No. 275 — சென்னை-1

## அடுத்த இதழிலிருந்து


# தஞ்சை அரசியல் மாநாட்டில்
## தோழர் N. V. நடராசன் அவர்கள் தலைமையுரை

தஞ்சை தி. மு. கழக அரசியல் மாநாட்டுக்குத் தலைமை வகித்து தோழர் என். வி. நடராசன் ஆற்றிய சொற்பொழிவு:—

அன்புமிக்க அண்ணா அவர்களே வரவேற்புக் குழுவினரே, மாநாட்டுப் பிரதிநிதிகளே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன் பல மாநாடுகளில் தலைமை வகித்திருந்த போதிலும், இம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்று வரவேற்புக் குழுவினரிடமிருந்து கடிதம் வந்ததும் சற்று அஞ்சினேன். முப்பெரும் போராட்டங்களுக்குப் பிறகு முதன் முதல் கூடும் இம்மாநாட்டில் அதுவும், புதிய மந்திரி சபை அமையப் போகும் இந்தருணத்தில் மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுவதென்பது சிரமமானதாகும் எனவேதான் அஞ்சினேன்.

அக்டோபர் 3-ந் தேதியன்று சென்னை காங்கிரஸ் கூட்டமொன்றில் அன்றைய முதலமைச்சர் ஆச்சாரியார் பேசுகையில் திராவிடர் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழக மென்பது இனி நாட்டிலே நடமாட முடியாது. அதனைக் காணவும் முடியாது. சரித்திரத்திலே தான் அதைக் காணமுடியும். அக்கழகங்களின கணக்கை தீர்த்துக் கட்டிவிட்டேன், முடித்துவிட்டேன் என்று கொக்கரித்தார்.



ஆனால் அவ்விதம் கொக்கரித்த ஆச்சாரியார் இன்று—அவரது ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாத அளவுக்கு தனது கணக்கை முடித்துக் கொண்டு வெளியேறி விட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய கல்வி திட்ட எதிர்ப்பு போராட்டமே ஆச்சாரியார் ஆணவத்தை தூள் தூளாக்கியது என்பதைத் தலைநிமிர்ந்து கூறுவேன்.

எனவே அடுத்துவரும் காமராசர் மந்திரி சபையாகிலும் சற்று விவேகத்தோடு—ஆச்சாரியார் ஆட்சியின் சரிவை மனதில் கொண்டு உடனடியாக குலக் கல்வி திட்டத்தை வாபஸ் பெற்றாக வேண்டும்.

அடுத்தபடியாக—வடநாட்டு முதலாளியான டால்மியா, தென்னாட்டு மண்ணை அள்ளி பொன்னாகக் குவித்துக்கொண்டு போவதல்லாமல் கொஞ்சமேனும் நன்றியும் நேர்மையுமின்றி கன்னித் தமிழ் பெயராம் கல்லக்குடியை டால்மியாபுரம் என்று மாற்றிய மமதையை எதிர்த்து—அந்த மாசை துடைக்க கடமை வீரர் கலைஞர் கருணாநிதி தலைமையிலே புறப்பட்ட வீரப்படை மீண்டும் கலலக்குடியாக மாற்றிற்று. இன்றளவும் அந்த லட்சிய வீரர்கள் தீட்டிய கல்லக்குடி கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

டெல்லி ஆட்சி பீடத்தின் முதல்வரான நேரு பண்டிதர் நம் மொழியை—கொள்கை கோட்பாடுகளைத் தாக்கியும் இழித்தும் பேசினார். அவரது அறியாமைக்கு புத்திபுகட்டநாமெல்லோரும் ரயிலை நிறுத்தி அமைதியோடு அறப்போர் மூலம் திராவிடத்தின் மனக் குமுறலை

கலைமன்றம் 4 அணா 40-பக்கங்கள்

எடுத்துக் காட்டினேம், இதன் காரணமாக அடக்குமுறை கொடுமைகளுக்கு நம் தோழர்கள் பலியாயினர், சிறைக் கொடுமைகளுக்கு ஆளாயினர். எனினும் நமது அறப்போரை மேலும் நடத்திச் செல்வதில் அஞ்சினேமில்லை.

ஆனல் ஆளும் வர்க்கமோ நமது அருமைத் தோழர்கள் தங்கப்பழம், சிவசாமி, நடராசன், சாமி, ரத்தினம் உள்பட 96 பேர்கள் மீது பழி சுமத்தி—9 மாதகாலமாக விசாரணைக் கைதிகளாக சிறைப்படுத்தியிருக்கிறது. இதேபோல கல்லக்குடி வழக்கிலும் நமது வீரர்கள் தர்மலிங்கம், கவிஞர் கண்ணதாசன் உள்ளிட்ட பலர் சிறைக்கொடுமைகளுக்கு ஆளாகி அவதிப்படுகின்றனர். எனவே காமராசர் ஆட்சி, கல்லக்குடி—தூத்துக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும்.

அருமைத் தோழர் சம்பத் அவர்களைப் போராட்டத் தலைவராகக் கொண்ட குலக் கல்வி திட்ட எதிர்ப்பில் ஏராளமானத் தோழர்கள் சர்க்காரின் சவாலை ஏற்று தொல்லைகளுக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகியுள்ளனர்.


ஆசைத்தம்பி—எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. முள் | 1 | 0 |
| 4. மனைவி | 0 | 12 |
| 2. தனியரசு ஏன்? | 1 | 0 |
| 3. கொலைகாரி | 0 | 12 |
| 5. அவள் வாழ்வு | 8 | 0 |

விபரங்களுக்கு:

கலைமன்றம் - சென்னை-1



விருதை ந. இராமசாமி எழுதியவை

| | | |
|---|---|---|
| வழுக்கி விழுந்தவள் | 1 | 0 |
| மலர்புரி ராணி | 1 | 0 |
| தளபதி | 1 | 0 |
| தாமஸ் மசாரிக் | 1 | 0 |
| கருமுகில் | 1 | 0 |
| புது வாழ்வு | 1 | 0 |
| இலட்சியப் பெண் | 1 | 0 |

விபரங்களுக்கு:

கலைமன்றம் - சென்னை-1


எனவே கடந்த 9—மாதங்களாக நாம் ஆற்றிவரும் பணி மகத்தானதாகும். தூய்மையானதாகும் ஆகவே வெற்றியில் எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

காமராசர் ஆட்சி என்ன செய்யப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டியிருக்கிறது. மக்களின் மகத்தான சக்தியை காமராசர் ஆட்சியும் மதிக்காமல் கோணல் புத்தி கொண்டு நடந்தால் அந்த ஆட்சி, ஆச்சாரியார், ஆட்சியைவிட விரைவில் சிதையுறும் என்பதை இம்மாநாட்டின் மூலம் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

காமராசர் தமது மந்திரிசபை பட்டியலை வெளியிடுவற்கே வடநாட்டுத் தேவதைகளின் வரம் பெற ஓடுகிறார்! இவ்விழிநிலை இன்னுமா நீடிக்க வேண்டும்?

என்றைக் கிருந்தாலும் ஒருநாள் காமராசர் போன்றவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினை பிரச்னையில் குபேர்களாக மாறத்தான் போகிறார்கள் என்பது மட்டும் உறுதி.


திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணி கல்வித் திட்ட எதிர்ப்போடும், கல்லக்குடி போராட்டத்தோடும் முடிந்துவிடவில்லை. அதனின் இறுதி லட்சியமாகிய நாட்டு பிரிவினையை அடைவதற்கு இவைகள் ஒத்திகைகள் போன்றதாகும்.

இந்நிலையில் கழகத் தோழர்கள் மேலும் கட்டுப்பாடுடன் பணியாற்ற வேண்டும். நமது அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவதைப் போல எதையுந்தாங்கும் இதயத்துடன் நமது இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்ல இம்மாநாடு வழியைக் காட்டும் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டதுடன், இலங்கை ஒப்பந்தம் அமெரிக்க பாகிஸ்தான் உடன்படிக்கை புதுவை எழுச்சி, தமிழகத்துடன் சேரவேண்டிய மற்ற பகுதிகள், தொழிலாளர் பிரச்னை ஆகியவைகளைக் குறித்தும் விரிவாகப் பேசினர்.

## சம்பத் திறப்புரை......

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். கொஞ்சம் காலில் வலுவுள்ள நாய்கள் ஓடிவரட்டும். ஆகவே இந்த நேரத்தில் சில்லரைக் குழப்பத்தை வளர்க்காது இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு திராவிட நாட்டைக் கட்டாயம் பெறவேண்டும். இந்த நேரத்தில் உங்களுக்கு அதிக உறுதியும், பண்பாடும் தேவை என்றுகூறி இம்மாநாட்டைத் துவக்கி வைக்கிறேன்.



# தீர்மானங்கள்

(1) தோழர்கள் எம். என். ராய், வி. வி. தனுஸ்கோடி, நெடும்பலம் சாமியப்பா, அருப்புக்கோட்டை முத்து, பட்டிவீரன்பட்டி சௌந்திர பாண்டியனார் துணைவி பாலம்மாள், திருச்சி சங்கரன், கே. கே. சோம சுந்தரம், கீழ நம்மங்குறிச்சி முருகையா ஆகியோர் மறைவுக்காக இம்மகாநாடு வருந்துவதுடன் அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

(2) தஞ்சைமாவட்டத்திலிருந்து மும்முனை போராட்டங்களில்கலந்து அடக்குமுறைகளுக்கும் சிறைதண்டனைகளுக்கும் பலியாகி அவதிப்பட்ட 500 க்கும் மேற்பட்ட தொண்டர்களுக்கும் இம்மகாநாடு தன்வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

(3) பாக், அமெரிக்க முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தோடு செய்துகொண்ட ராணுவ ஒப்பந்தம் ஆசிய நாடுகளில் நிலவும் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதால் அதை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக கைவிடுமாறு பாக் சர்க்காரை வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறது.

(4) சென்னை சர்க்கார் உடனடியாக ஒருமுனை விற்பனை வரியை கொணர்ந்து தற்சமயம் வியாபாரிகள் அடைந்துவரும் இன்னல்களை தவிர்க்குமாறு சென்னை சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

(5) இப்பொழுது சுயமரியாதை திருமணங்களைக் குறித்து சில பிரச்னைகளை கிளப்பி இருக்கும் சர்க்கார் நம் நாட்டில் நடக்கும் எல்லா வகை திருமணங்களையும் சட்டபூர்வமாக பதிவுசெய்தால்தான் செல்லுபடியாகும் என்று உத்தரவிடுமாறுகேட்டுக் கொள்கிறது.

(6) உப கண்டத்தில் உள்ள எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் சர்க்கார் பெறவேண்டுமானால் தென் மொழிகளில் ஒன்றான தமிழை அரசாங்க மொழியாக இணைக்கும்படியாகவும், ஹிந்தியை கட்டாயமாக மற்றவர்கள் மேல் திணிப்பதை நிறுத்தும்படியும் மத்தியசர்க்காரைக் கேட்டுக்கொள்வதுடன் இதை ஆதரித்து நடைமுறையில் கொண்டுவர திராவிடர்கள் அனைவரும் ஒன்றுபட்டு பணியாற்றவேண்டும்.

(7) தஞ்சாவூரில் இருந்து அதிகமான மாணவர்கள் கல்லூரிகளில் படிக்க கும்பகோணத்திற்கும் திருச்சிக்கும் சென்று அவதிப்பட வேண்டி இருப்பதால் தஞ்சையில் ஒரு கல்லூரி ஏற்படுத்த இம்மகாநாடு சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

(8) பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து புதுச்சேரி, காரைக்கால் ஆன இடங்களில் நடக்கும் இணைப்பு கிளர்ச்சியை ஆதரிப்பதுடன் அந்த போராட்டம் வெற்றிபெற தி. மு. க. தன்னால் ஆன உதவி அவ்வளவும் செய்யும்.


உலக அறிஞர்கள் சிந்திய அமுதத் துளிகள்

1. தாகூர் முத்துக்குவியல் 0 8
2. விவேகானந்தர்வீரவுரைகள் 0 8
3. இராமகிருஷ்ணர் அருள் வாக்குகள் 0 8
4. மாஜினி மணிமொழிகள் 0 8
5. இங்கர்சால் அறிவுரைகள் 0 8
6. ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் 0 8
7. ஏசுநாதர் உபதேச மொழிகள் 0 8
8. அண்ணாவின் உவமைகள் 0 8
9. கீதை உபதேச மொழிகள் 0 8
10. லெனின்பொன்மொழிகள் 0 8
11. ஸ்டாலின் புரட்சி மொழிகள் 0 8
12. வள்ளலார் வாய் மொழிகள் 0 8
13. கம்பர் கற்பனைகள் 0 8
14. கருணாநிதி கருத்துரைகள் 0 8
15. திருக்குறள் மூலம் 0 8

விபரங்களுக்கு: 199106
கலைமன்றம் - சென்னை-1


(9) அமையப்போகும் சென்னை புதிய மந்திரி சபையானது ஜனநாயகத்தை மதித்து ஆச்சாரியாரின் வர்ணாசிரம கல்வி திட்டத்தை உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

(10) கல்லக்குடி, தூத்துக்குடி, கழக தோழர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வரப்போகும் புது மந்திரி சபையார் வாபஸ் பெற வேண்டும்.

(11) பெரும் நிலப்பிரபுக்கள், மடாதிபதிகள், ஆலயங்களின், தர்ம பாகங்கள் ஆனவை பெயரால் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் தேவை போக மீதியை விவசாயிகளுக்குப் பிரித்து தர வேண்டும் என்றும் நிலவுரிமையை, பொருத்தவரை ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

(12) நேரும் கொத்தலாவலையும் செய்துகொண்ட ஒப்பந்தம் இலங்கைவாழ் இந்தியருக்கு கேடு விளைப்பதாக இருப்பதால் அதை ரத்து செய்வதுடன் இலங்கை பிரச்னையை தீர்த்து வைக்கும் பொறுப்பை தமிழ் நாட்டுத் தலைவர்களிடமே ஒப்புவிக்கும்படி இம்மகாநாடு மத்திய சர்க்காரை வற்புறுத்துகிறது.

(13) தீண்டாமையை ஒழித்து விட்டோம் என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட தோழர்களை உணவு சிற்றுண்டி விடுதிகளில் அனுமதிக்காமல் தடுக்கும் ஜாதிக் கொடுமை நிலையை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக இவ்வித ஜாதிக் கொடுமையை ஒழிக்கும் வகையில் சென்னை அரசியல் சட்டத்தின் மூலமாக ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

(14) தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு ரயில் போக்குவரத்துக்கு வேண்டிய சர்வே முதலியன செய்து முடித்தும் இன்னும் அந்த வேலையை எடுத்துக் கொள்ளவில்லை. அந்த வேலையை எடுத்து சீக்கிரம் பூர்த்தி செய்யும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

சிறுவர் தொடர் கதை



# கலைக்கோயில்

பூ. குருசாமி

## 8. இருளில் ஒளி

ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஆடையிலே பெரியவராகக் காணப்படவில்லை; நகை அணிந்திருப்பதிலும் பெரியவராகக் காணப்படவில்லை. குணத்திலும், வயதிலும் தான் முதிர்ந்தவராகக்காணப்பட்டார்.

“தம்பி! இந்தக் குளிர் காற்றில், இங்கே தனிமையாக ஏன் நின்றிருக்கிறாய்......? இந்த ஊரில் உனக்கு தெரிந்தவர்கள் ஒருவருமில்லையா?.” என்று அன்புடன் கேட்டார், தாத்தா.

“தாத்தா! நான் இப்பொழுது அனாதைதான்!...... எனக்கு வேண்டியவர்கள் வெகு தூரத்திலிருக்கிறார்கள்......” என்று சுருக்கமாகக் கூறினான் முத்து.

“தம்பி!கவலைப்படாதே! இந்தமலை அடிவாரத்தில் என் குடிசை இருக்கிறது....... வா அங்கே போகலாம்......” என்று முத்துவை அன்புடன் அழைத்தார் தாத்தா.

அந்த அன்பு தாத்தாவின் உள்ளத்தை அவன் புண்படுத்த விரும்பவில்லை. முத்து தாத்தாவின் அழைப்பிற் கிணங்க, அவருடன் சென்றான்.

இருவரும் சிறிது தூரத்திலிருந்த குடிசையை அடைந்தனர். தாத்தா குடிசைக் கதவை திறந்தார். குடிசை முழுவதும் இருள் பரவி இருந்தது.

அந்த மை இருட்டில் தீப்பெட்டியைத் தேடி கண்டு பிடித்தார். அங்கே இருந்த அகல் விளக்கை ஏற்றினார். குடிசை முழுவதும் வெளிச்சம் பரவியது.

முத்துவின் இருண்ட வாழ்வில் அன்பு என்னும் அகல் விளக்கின் மூலம் வாழ்வு என்னும் ஒளியை ஏற்படுத்தினார், அந்த அன்பு தாத்தா. மரணம் என்னும் இருள் மறைந்தது!

“தம்பி! உள்ளே வாப்பா... இங்கே உட்கார்......” என்று தாத்தா கூறினார். முத்து குடிசையினுள் அமர்ந்தான்.

ஒரு தட்டில் அடையும், ஒரு குவளையில் நீரும் கொண்டுவந்து அவன் எதிரே வைத்தார். “தம்பி!......சாப்பிட்டு அதிக நாழிகையாயிற்று போலிருக்கிறது... உன் வாடின முகத்தைப் பார்த்தாலே, தெரிகிறதே! உம்... இதைச் சாப்பிடு” என்றார் தாத்தா.

முத்து அந்தத் தாத்தா அன்புடன் அளித்த உணவை அருந்தினான். அது அவனுக்கு அருசுவைக்கும் அப்பாற்பட்ட அமிர்தமாக இனித்தது!

“தம்பி! சாப்பிட்டானதும் இந்தக் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொள்...... இரவில் குளிரும்...... இந்தப் போர்வையைப் போர்த்துக் கொள்......” என்று கூறி ஒரு கிழிந்த போர்வையை அவனிடம் கொடுத்தார்.



முத்து அதை வாங்கிக் கொண்டான்.

இவ்வளவு அன்பாக உபசரிக்கும் அந்த அன்புத்தாத்தாவை என்னவென்று புகழ்வது? அவரைப் புகழ அவனுக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

“தாத்தா! கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால் அது நீங்கள் தான்” என்று கூறினான், முத்து.

தாத்தா புன்முறுவல் பூத்த முகத்துடன் தன் படுக்கைக்குப் போய் விட்டார். முத்துவும் கட்டிலில் படுத்து, கிழிந்த போர்வையால் போர்த்துக் கொண்டு, தூங்க ஆரம்பித்தான். எங்கெங்கேயோ சுற்றின களைப்பால் கண்ணயர்ந்தான், முத்து.

பொழுது விடிந்தது! தாத்தா முத்துவை எழுப்பினார். “என்ன தாத்தா?” என்று கேட்டுக் கொண்டே எழுந்தான் முத்து. “பொழுது விடிந்து விட்டது” என்றார் தாத்தா.

முத்து குடிசைக்கு வெளியே வந்து பார்த்தான்.

ஒரு இளம் அவரைச் செடி, கொழு கொம்பாக நின்றிருந்த தடித்த மூங்கிலின்மீது படர்ந்திருந்தது! முத்து, திரும்பி அப்போது அவனுக்கு ஆதரவாயிருந்த, அந்த அன்பு தாத்தாவைப் பார்த்தான்.

தாத்தாவும் அவனை அன்புடன் நோக்கினார்.

“தம்பி! இனி நீ எதற்கும் அஞ்சாதே!”...... என்று கூறுவதைப் போல இருந்தது, தாத்தாவின் அந்த அன்புப் பார்வை!

“தம்பி!” என்றார் தாத்தா. “என்ன தாத்தா?” என்று கேட்டுக் கொண்டே வந்தான் முத்து.

(22-ம் பக்கம் பார்க்க)




மூலக் கடவுளான கணபதி திருக்கைலாயத்தில் அமரர்களும், அடியவர்களும் புடைசூழ வீற்றிருக்க, கலகப்பிரியர், கலவிமுறைகளைக் கற்கண்டெனச் சுவைத்துக் கூறுபவர், நாரதர் அங்கு வந்தார். 'ஐயனே!' என்று நாரதர் கூற, "வாரும் நாரதரே" என்று கணநாதர் அருகழைக்க, "கண்டேன் இருவரை" என்று கூறிய நாரதரைப் பார்த்து "எதைக் கண்டீர்" என்று நாயகன் கேட்க "கன்னியர்கள் இருவரைக் கண்டேன், கேட்டருளும் அந்த எழிலரசிகளின் உடலின் வனப்பையும், உறுப்புகளின் வன்மையையும் மென்மையையும்" என்று நாரதர் தேவகன்னியரைப்பற்றி வர்ணித்துக் கொண்டே வந்தார்.

மேலும் தொடர்கிறது வர்ணனை படியுங்கள்.

இந்த வர்ணனைகள் ஒரு காமுகன் மற்றொரு காமுகனிடம் கூறுவதில்லை. முனிபுங்கவர்களால் கைகூப்பித் தொழப்படும் நாரதர், மோட்ச வீட்டின் வித்தான, பற்றற்ற பரமனை கணபதியிடம் கூறுகிறார். இது கடவுள் புராணம் கூறும் கதை, என்பதை மறந்து விடாமல் படியுங்கள்!

**வயிற்று மடிப்புகள்:**

அந்த வனிதாமணிகளின் வயிறுகளில் மடிப்புகள் இருந்தனவாம். அந்த மடிப்புகள் தாமரை மலர் வாய்ந்த குளப்படிகளையும் மருட்டும்படி இருந்ததாம்; அதுமட்டுமா? அந்த மடிப்புகளில் உரோமங்கள் இருந்தனவாம். அந்த உரோமங்கள் சிறு எலிகளுக்கு இருக்குமே அதுபோல இருந்தனவாம்: மேலும் அந்த உரோமங்கள் இடையிலே இடமில்லாதபடி நெருங்கி ஒழுங்காக இருந்தனவாம். அப்படி நெருங்கி இருந்தும், மிகமிக மிருதுவான மயிர்களாம், அவைகள், உள்ளோங்கி நெடுமையுற்று இடப்பக்கத்தில் பவளமான சுழிகள் ஏதும் இல்லாது எழில் மிகுந்திருக்கின்ற வயிற்று மடிப்புகள் செவ்வியதாக விருந்தனவாம். இந்த அழகான வயிற்று மடிப்புகளுடன் இருக்கும் அந்த மடவன்னங்களை மணக்க வேண்டும் என்று முறையிடுகிறார் நாரதர்.

**சகனம்:**

பருத்து உயர்ந்து மிக்க மேன்மை பொருந்தி யிருக்கின்ற சகனத்தை உடையவர்கள் அம்மாதர்கள்.

**மருங்கு:**

கொங்கைகளால் வருத்த மெய்தி மிகவும் மெலிந்து நிலை கொள்ளாமல் அசைந்தாடும் மருங்கினை யுடைய மங்கையர் திலகங்கள்.

**உந்தி:**

தேவையான வடிவுடனும், அகன்று தாழ்ந்து வலஞ்சுழித்து நரம்புமும் உரோமங்களும் இல்லாமல் மிக்க ஒளிபெற்றிருக்கின்ற உந்தியை உடைய உத்தமிகள்.

**மயிரொழுங்கு:**

பலவகைப்பட்ட சுழிகளும் உரோமங்களும் நீண்ட மடிப்புகளும் இல்லாமல் மூன்று நல்ல ரேகைகளைப் பொருந்திச் சிறந்த வாயிலைப் போல வாய்ந்து சொல்லுக் கடங்காத வனப்பில் விளங்கும் வயிற்று மயிரொழுங்கினைக் காண இருகண்கள் போதா.

**விலாப்புறங்கள்:**

எலும்பு, நரம்பு, உரோமம், ஆகிய இவைகள் தோற்றாமல், நடுவுமாழாமல் மிருதுவாகி இன்புறத்தக்க தசைப்பொருந்திய பதினெட்டாங் குல அளவுடையதாய்ச் சீர் கொண்டிருப்பனவாகிய விலாப் புறங்களையுடைய வேல்விழி மாதர்கள்.

**ஸ்தனங்கள்:**

புடைபரந்து மேலெழுந்து நீலமணி சேர்த்தாற் கொப்பான சில் முகம் வாய்ந்து இடை தோன்றாமல் நெருங்கிப் பெருமை பொருந்திய மார்பினிட முழுவதும் நிறைந்து கடையில்லாமற் பருத்துப் பூரித்து தம்முளிரண்டு மொத்து இடையினை வருத்தி நிமிர்ந்திருக்கின்ற ஸ்தனங்களையுடைய தையலர்களின் வனப்பை என்ன வென்று வர்ணிப்பேன்.

**சூசுகங்கள்:**

பருத்தல், நீளல், நுதியாழ்தல், உருநேர்த்தல், நீங்குதல், நலமறல், ஒவ்வாதிருத்தல், கடினமுறல் ஆகிய இக்குற்றங்கள் பொருந்தாமல் வன்மையாகிய சக்கரம்போலப் பிரகாசித்து அடிகனத்துத் தனக்குத் தானே ஒப்பாயிருக்கிற சூசுகங்களையுடையவர்கள்,


**வாழ்க்கை வரலாறுகள்**

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணாதுரை | 0 | 8 |
| தலைவர் பெரியார் | 0 | 8 |
| புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் | 0 | 8 |
| கடமை வீரர் கருணாநிதி | 0 | 8 |
| அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி | 0 | 8 |
| பன்னீர்செல்வம், பாண்டியனார், வேலாயுதம், | 0 | 8 |
| நெடுஞ்செழியன், நடராசன் மதியழகன் | 0 | 8 |
| சம்பத், நீலமேகம் | 0 | 8 |
| ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 | 8 |
| இராமமிர்தத்தம்மையார், அருண்மொழி, பூங்கோதை | 0 | 8 |

விபரங்களுக்கு:
கலைமன்றம் — சென்னை-1

**கழுத்தடி:**

நீளுதலும், குறுகுதலும், என்பு தோன்றுதலும் இல்லாத கழுத்தடியினையும் உடையவள்.

**தோள்கள்:**

என்பு, நரம்பு, உரோமம் ஆகிய இவைகள் தோன்றாமல் பெருக்காமல் அழகு நிறைந்து திரண்டிருக்கின்ற வேய்போல் பிரகாசிக்கும் தோள்களையுடைய தோகைமயிலனையவர்கள்.

**முன்னங் கைகள்:**

தசை தோன்றாதனவாகிய மூட்டுக்களையும், நீண்ட நரம்புகளும் உரோமங்களும் தோன்றாது வன்மை பொருந்திய மகர வீணையையொத்த முன்னங்கைகளையும் கண்டால் களிதீரும்.

**உள்ளங் கைகள்:**

வரிசையாகிய பல ரேகைகள் தம்முள் நெருங்குதலும், மிகவும் நீங்குதலும், பரந்து தோன்றுகின்ற நரம்புகள் மிகுதலும், உரோமங்கள் பொருந்துதலும் ஒட்டகம், தவளை, செந்நாய், பாம்பு, தேள், கமுகு, பூனை, கர்த்தபம், நரி, ஈட்டி இவைகளைப்போலிருக்கின்ற வேறுபட்ட இரேகைகளுமில்லாமற் கவிகை, கூர்மம், வலம்புரிச் சங்கு, மச்சம், பதுமம், நவக்கிரகச் சக்கரம், நுகத்தடி, துலாக்கோல், வண்டி, இடபம், யானை, குதிரை, தோட்டி, சாமரம், வச்சிராயுதம், நேமி என்னும் இவ்வகை ரேகைகளைப் பொருந்தி வனத்தில் திரிகின்ற முயல் வயிற்றினும் மிருதுவாகிச் செவ்வாம்பல் மலரைப் போல பிரகாசிக்கின்ற உள்ளங்கைகளையும் உடைய உத்தமிகள்.

**கைவிரல்கள்:**

சிவத்தலின்றி வளைந்திருத்தலும், இடைவிட்டு நீங்குதலும், நரம்பும் உரோமமும் பொருந்துதலும் நேர்ந்திருத்தலும் மிருதுவில்லாமல் மிக்க வன்மையாதலும் இன்றி நீலோற்பல முகையை வென்று சிவந்த நல்ல ரேகைகள் வாய்ந்த கைவிரல்கள் அந்தக் கன்னிப் பெண்களுக்கு உண்டு.

**நகக்கூட்டங்கள்:**

பள்ளமாதலும், வெண்மையாதலும், குணமில்லாமல் சரசரத்திருத்தலும், புள்ளியாகிய வெண்மை தோன்றலும் பொன்னிறமில்லாது கிளியின் வாயினை யொத்துச் சிவந்து பிரகாசிக்கின்ற கைவிரல்களின் நகக் கூட்டங்களையும் உடையவர்கள்.

**முதுகு:**

என்பு தோன்றல், நரம்பும் உரோமமும் மருவல், உயர்தல், கூனியிருத்தல் முதலியன அகன்று மிருதுவாகிய தசையினால் மறையப்பட்டு எழுதற்குரிய வனப்பின் மிகுந்து காட்சியளிக்கும் முதுகழகினை என்னென்று கூறுவேன்.

**பிடரி:**

கோணுதல், நரம்பு தோற்றல், மயிர் கிளைத்தல், நீளல் வற்றல் என்னுமிக் குற்றங்களினின்று எழில் வாய்ந்திருக்கின்ற பிடரியின் பெருமையை என்னென்று பேசுவது?

என்று இன்னும் கூறிக்கொண்டே போகிறார் நாரதர். நீண்டுகொண்டே போகிறது விஷயம். அடுத்த வாரத்தில் சந்திப்போம்!

(தொடரும்)

[ஓரங்க நாடகம்]

# திருடல்ல-தேவையானது

[வெற்றிவேலு]

## காட்சி—1.

இடம்: வைகுந்தம். நேரம்: மாலை 5-மணி. (12—4—54) பாத்திரங்கள்: கரிய மாணிக்கம்பெருமாள், மனைவி லட்சுமிதேவி.

(பெருமாள் வருகிறார்வீடுநோக்கி. வீடு திறந்து கிடக்கிறது, லட்சுமியைக் காணவில்லை.)

பெருமாள்:- லட்சுமி!...... லட்சுமி!! (தனக்குள்) எங்கே போயிட்டா காணோம்! சாயந்திரம் அஞ்சு மணிக்கு ரெடியா இரு, உன்னை இந்திர நடனத்திற்கு கூட்டிகிட்டுப் போறேன்னு வேறு சொல்லியிருந்தேன். எப்பவும் அபாரமா சிங்காரிச்சுட்டு நிற்கறவ இன்னிக்கு வீட்டிலேயே காண வில்லையே!......உம்.........

(லட்சுமி கண்ணை துடைத்துக் கொண்டு வருகிறாள்.)

பெருமாள்: (பதற்றத்துடன்) லட்சுமி!...... லட்சுமி உனக்கென்ன உடம்புக்கு!...... தலைவலியா...... சொல்லு இப்பவே ஆஸ்ப்ரோ ஒண்ணு வாங்கிட்டு வரேன்......

லட்சுமி: (மென்று விழுங்கி) ஒன்றுமில்லை பிராணபதே!

பெருமாள்: ஒன்று மில்லையா......... அழுதழுது கண்ணெல்லாம் கோவைப் பழம்போல சிவந்திருக்கு. முகம் வீங்கிப் போயிருக்குது...... தலையெல்லாம் கலைஞ்சு கிடக்கு. நான் உன்னை இன்று இந்திர நடனத்திற்கு கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொல்லியிருந்தும் கூட நீ இப்படி சிங்காரிக்காம அழுதுகிட்டு நீ இருந்திருக்கிறே ஒண்ணுமில்லேன்னு யாரு நம்புவா?...... (கெஞ்சிக் கன்னத்தைப் பிடித்து) லட்சுமி......... சொல்லு! யாராவது என்னவது சொன்னார்களா? (சிரித்து) பொய்கைத் தாமரை வாகனத்தாளே! பொன்னவிர்லோக பொருட்செல்வியே! இந்தப் பரந்தாமன் அருகே பாம்பின்மீது படுத்துறங்கும் பலாச் சுளை மொழியரசி! எங்கே உன் மாதுள முத்து......

லட்சுமி: (பெருமாள் கையைத்தட்டி) உங்களுக்கு இப்படி வாய்வீச்சு வீசுவதற்கு குறைவில்லை! ஆனா ரோசம்! மானம், ஆண்மை! அறிவு இவைகளில் எல்லாம் ஒண்ணுவது இல்லையே!

பெருமாள்: (சற்று கோபமாக) எப்படி எனக்கு இல்லாம போச்சு! ராமாவதாரம் எடுத்தேன் ராவணனைக் கொன்றேன். கிருஷ்ணவதாரம் எடுத்தேன், துரியோதிரனைத் தொலைத்தேன். நரசிம்ம அவதாரம், இரணியன்...... கூர்மாவதாரம்.........

லட்சுமி: போதும்! போதும் உங்கள் பெருமைப்பிரவாகம்!...... ராமாவதாரம் எடுத்து பெண்டாட்டி சீதையை ராவணன் எடுத்துட்டுப் போகிறமாதிரி நடந்துகிட்டது மில்லாம ஒரு வண்ணான் சொல்லறான்னு சீதையை காட்டுக்கு

அனுப்பினீங்க, கிருஷ்ணவதாரத்திலேதான் நீங்க நல்லதா செஞ்சீங்க. பெண்கள் குளிக்கிறபோது சேலையைத் தூக்கிட்டு புன்னைமரத்திலேறி அட்டகாசம் செய்தீங்க! அதுவுமில்லாம பெண்குலத்துக்கே ஒருபெரிய அவமானத்தை ஏற்படுத்தினீங்க அதாவது துரௌபதையை அஞ்சு பேருக்கும் ஆசைநாயகி ஆக்கி "ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி" ண்ணு சொன்னீங்க! இதெல்லாம் ஒண்ணுசேர்ந்து இப்போ நமக்கே பெருத்த அவமானத்தை ஏற்படுத்திட்டான் திருநெல்வேலியிலே!....

பெருமாள்: என்னலட்சுமி! திருநெல்வேலியிலே!.......

லட்சுமி: தமிழ் நாடே சிரிக்குது! ஏமாளி! ஏமாளிண்ணு

பெருமாள்: (கோபமாக) ஏமாளியா! யார் நானு? கிருஷ்ணவதாரத்திலே சூரியனையே அஸ்தமிக்காமல் மறைத்தவனுக்கும் நான்! யார் என்னை ஏமாளின்னு சொன்னவே (பல்லை நறநறவெனக் கடித்து) உம்...லட்சுமி! நீ சொல்லீட்டே - வேறே எவனாவது சொல்லிருந்தா......

லட்சுமி: என்ன செய்வீங்களாம்! உம்! வெட்கக்கேடு! நீங்க போயி திருநெல்வேலியிலே விசாரிச்சுட்டு வாங்க! நான் எனக்குச் சொன்னவனை போயி இழுத்துகிட்டு வர்றேன்.

(லட்சுமி போகிறாள். பெருமாள் கோபமாக போகிறார்.)

(திரை)

## காட்சி—2.

இடம்: திருநெல்வேலி கோவில். நேரம்: மாலை 6-மணி. பாத்திரங்கள்: கரிய மாணிக்கம் பெருமாள் பக்தர்கள்.

(பெருமாள் உருவம் மாறி சிலைக்குள் புகுந்து கொள்கிறார். பக்தர்கள் வந்து பாடிப் போகின்றனர்.)
பக்தர்கள் (பாடுகிறார்கள்)

**கண்ணில்லையா உனக்குக் கரிய மாணிக்கா**
**களவு போயிற்றே உன் தங்கக் கிரீடம்**
**எண்ணாயிரம் ரூபாய் எடுத்துப் போனானே**
**உன் நாமம் எங்கட்குப் போட்டுப் போனானே**
**பண்ணாயிரம் பாடிக் கூடிப் பூஜித்தோம்**
**பாராமல் நீ யிருந்தது உன் விதிதானோ!**

(இந்தப் பாட்டைக்கேட்டுக் கேட்டுக் கண்ணை விழித்துப் பார்த்த பெருமாள் உடலெல்லாம் நகை இல்லாதது கண்டு மீண்டும் உருவம்மாறி வைகுந்தம் நோக்கி ஓடுகிறார்.)

(திரை)

## காட்சி—3.

இடம்: வைகுந்தம். நேரம்: இரவு 8-மணி பாத்திரங்கள்: கரியமாணிக்கம் பெருமாள், லட்சுமி.

(பெருமாள் ஓடிவருகிறார். லட்சுமி உள்ளிருந்து வருகிறாள்.)

பெருமாள்: லட்சுமி! எடு அந்த சூலாயுதத்தை இப்பவே போயி! என் கிரீடத்தைத் திருடிய அந்தத் திருடனின் சிரசைக் கொய்துவருகிறேன். என்ன தைரியம் அவனுக்கிருக்க வேண்டும். ஏழுலகங்களும் அண்டசராசரங்களும் சண்டமாருதச் சாம்பவான் என்று கண்டால் நடுங்கிடுகிறது!... ஏன் தயங்குகிறாய் எடுத்துவா சக்கரத்தை!......மறந்தவர்களும் அறியட்டும் என் பெருமையை.

லட்சுமி: இந்தா பாருங்க சும்மா துள்ளாதீங்க! நான் கேட்கறதுக்கு பதில் சொல்லீட்டு அப்புறம் போங்க!.........

பெருமாள்: லட்சுமி!...... கேள்வி கேட்க உனக்கு இதுவா நேரம். சரி! சீக்கிரம் கேளு......

லட்சுமி: நீங்க ஏன்என்னைக் கலியாணம் செய்துட்டீங்க!

பெருமாள்: இதென்னடி கேள்வி!... சிலையரசி! நீ என் சின்றின்பக் கேணி! செந்தேனூறு...... ஆதலால்தான் மணந்து கொண்டேன் உன்னை......

லட்சுமி: நான் எப்படி உங்களுக்கு அவசியமானவளோ அப்படி உங்கள் கோவிலில் இருந்த நகைகள் அந்தத் திருடனுக்கு தேவையானது அதனால்தான்......

பெருமாள்: தேவையானதுண்ணு திருடறதோ!......

லட்சுமி: நீங்க மட்டும் ஏன் கண்ணனாகத் தோன்றி வெண்ணையைத் திருடினீங்க......

பெருமாள்: அது!...... அது!.........

லட்சுமி: அது!... இங்கே பாருங்க... ஒரு மனிதனுக்குள்ளது தேவையோ அது அவனிடத்திலேயிருந்துவிட்டால் அவன் மிகவும் நல்லவனாகி விடுவான். உலக மக்கள் எல்லாம் நல்லவர்களாக வேண்டுமானால் நம்மைப்போல் உள்ளவர்கள் சேர்த்து வைத்திருக்கிற தேவையற்றதை தேவையுள்ளவர்களுக்குப் பங்கிட்டுத் தரவேண்டும். உங்க கிரீடத்தைத் திருடியவன் எத்தனை நாள் சோறு இல்லாம இருந்திருப்பான் அதை கவனிச்சீங்களா. அவனுடைய, பாலில்லாமல் தவிக்கும் பாலகர்கள்.-படுத்த படுக்கையில் கிடக்கும் அவன் மனைவி. எணணியதுண்டா நீங்கள்...... கிரீடத்தை அணிந்து கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும் என்பதைத்தானே பார்க்கிறீர்கள்.

பெருமாள்: ஆமாம்! லட்சுமி! நீ சொன்னது அத்தனையும்உண்மை. இப்போதே என் பக்தர்களுக்கு உத்தரவு போட்டுவிடுகிறேன். உபயம் செய்ய வேண்டாமென்று.

லட்சுமி: அது வேண்டாம் இன்னும் கொஞ்ச நாளில் புது அரசாங்கமே வந்து கோவில் நகைகளை விற்று மக்கள் நலத்திற்குச் செலவிடும். அப்படி பேசுகிற இயக்கம் இன்று மலையென வளர்ந்திருக்கிறது...... அதுதான் நியாயமான கோரிக்கையாகும்......

பெருமாள்: அது சரி! உனக்கெப்படித் தெரிந்தது. திருநெல்வேலியில் கிரீடம் களவு போயிற்று என்று......

லட்சுமி: இதோ பாருங்க இன்றைய "மெயில்" பேப்பரில்.

(லட்சுமி "மெயில்" பேப்பரைக் காட்டுகிறாள்.)

TIRUNELVELI. Apr. 12. Sri Kariamanikkam perumal Temple, in Tirunelveli Town was burgled on Saturday night. Jewels and vessels, valued at Rs. 8,500, are reported missingfromthe 'Treasure' room. A gold Jewel Studded with precious stones and a crown known as the 'Kreetam' to adorn the head of the Idol costing about Rs. 5 000, was among the jewels missing.

(திரை)

வர்ணனைக் கட்டுரை

# காற்று

[A. K. வில்வம்]

காற்றே! இயற்கையன்னையின் வற்ருத இன்ப ஊற்றே! உடலில்லாப் பெண்ணே! உன் கதை என்ன? உன்னைப் படைத்தது யார்? ஆண்டவன்! அப்படியானல், அவனைப் படைத்தது யார்? அவன் தானகத் தோன்றியவன் என்ருல், நீ ஏன் தானகத் தோன்றி இருக்கக்கூடாது! மௌனம் சாதிக்கிருயே! உனக்கே புரியவில்லையா உன் பிறப்பின் சிதம்பர ரகசியம்! உலகின் ஒரே ஒரு பொதுவுடமை பொருளே! உயிரினங்களின் உயிர் காக்கும் உயிரமுதே! உள்ளம் திறந்து என்னுடன் உரையாடமாட்டாயா?

உயிர் காற்றே! இளஞ்சிரிப்பே! தளிர் நடையே! குளிர் பார்வையே—களி நடமே — கனி மொழியே — இளந் தென்றலாக மாறி "விலக்காத பெண்ணின் உடையை எல்லாம் விலக்கி விட்டு வேடிக்கைப் பார்க்கிருய்! தெம்மாங்கு பாடும் தென்றலே நியாயமா—நின் செயல்! காதலுக்கு விருந்தாய்—கடுநோய்க்கு மருந்தாய் பயன்படும் உன் ஆற்றலுக்கு இணையேது! ஈடேது! நீ போகாத இடமேது! பார்க்காத பொருளேது! சீற்றம் நிறைந்தவளே உன் உண்மைத் தோற்றத்தைக் காட்டமாட்டாயா?

பாடி வரும் பருவக்காற்றே! அன்பையும்—அமைதியையும் அணிகலன்களாகப்பூண்ட நீ—கோபம் கொண்டால் "குணம் எனும் குன்றேறி நின்ருர் தம் வெகுளி—கணமேயுங் காத்தல் அரிது" என்ற ஈரடிக் குறள் என் நினைவிற்கு வருகிறது! அப்பப்பா! சீறும் புயலாய்—சுழன்றடிக்கும் சூருவளியாய் நீ மாறும் பொழுது—உண்மையாகவே உன்னை வெறுக்கிறேன்; அச்சம்—மடம்—நாணம்—பயிர்ப்பு—அத்தனையும் மறந்து நீ ஆட்டம்போடும்—அந்தப் பேயாட்டம்; நீ செய்யும் நன்மைகளையெல்லாம் மறைத்துவிடுகிறது! மக்களை மறந்துவிடச் செய்கிறது; அதன் விளைவாக "கொடும்புயலே! நீ ஒழிக" என்ற சுடு மொழிகளை பரிசாகப் பெறுகிருய்! அந்தக் கடு மொழிகளை நீ ஏற்பது உன் பெருந்தன்மைக்கு அழகல்ல! மாற்றிகொள் உன் அந்த விபரீத போக்கை! அன்புடைய காற்றமுகி! சீற்றம் கொள்ளாமல் ஏற்றுக்கொள் இந்த என் அறிவுரையை! ஏற்றுக்கொள்ளமாட்டாயா?

o o o

காணமுடியாக் காரிகையே! உன்னைக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்; ஓடிப்பாயும் ஊடுருவியே! என்னைத் தொடுகிருய்—கண் இமைப்பதற்குள்—மின்னலென மறைகிருய்! உயிர் கொடுத்த தாயே! உலக மக்களைத் தாலாட்டும் தயை நிறைந்த தோழியே! உன் அன்பு முகத்தை—அருளொழுகும் கண்களை—என்றுமே நான் காணமுடியாதா? கடல் அலைமேல் நடைபோடும் கருணை நிறைந்தவளே! காட்டிலே வட்டமிடும் வானம் பாடியே! வீசும் வசீகரத் தென்றலே—மென்காற்றே! தளிர்களின் மேல்—களி நடம்புரியும் குளிர் நிலவே! குறையாத சுரபியே! எழுதமுடியா எழிலோவியமே! உன் உறைவிடம் எது! உடுக்கிருயா? உண்கிருயா? உறங்குகிருயா? உயிர் உண்டா உனக்கு—உருவில்லா கலையே! அனைத்தையும் 'கடந்த' கடவுளே! நிலைபெருதா சிலையே! எனக்கு மட்டும் அந்த ரகசியத்தை சொல்லிவிடு! சொல்ல மாட்டாயா?

வேகம் கடந்த விமானமே! உன் வேகம் விநடிக்கு எத்தனை மைல்! இமயத்தின் உச்சியிலிருந்து இந்துமாக் கடலில் குதிக்கிருய்! மதுரையிலிருந்து மாஸ்கோவிற்கு தாவுகிருய்! நைலில் மூழ்கி—காவிரியில் தலைகாட்டுகிருய்! ஆல்ப்ஸ் மலையில் கால் வைத்து—ஆண்டீஸ் மலைக்கு தாண்டுகிருய்! வட்டமிடும் முகிற்குடத்தை தட்டி விட்டு ஓடுகிருய்! அங்கிருந்து கொட்டும் தண்ணீர்—வாட்டமுற்ற உழவன் சொட்டும் கண்ணீரைக் கழுவி விடுகிறது! சமயம் கிடைத்தால் அவன் கட்டியிருக்கும் ஓட்டைக் கூரையையும் தூக்கி எறிந்து அவன் வாட்டத்தை பெருக்கி விடுகிருய்! சக்தி நிறைந்த காற்றே! சல சலக்கும் நடனக்காரி—உன் அன்புத் தழுவலால்—ஆனந்

எதிர் பாருங்கள்! விரைவில் வெளிவருகிறது!!

தமிழ், தெலுங்கு, இரு மொழிகளில் பூத்திடும் எழிலேடு

கலை முன்னேற்ற மாத இதழ்

**கலை அரங்கம்**

ஆசிரியர்: கலைச்செல்வன்

- கலை வளர்ச்சிக்கான புது முறைகளை எடுத்துக்காட்டும் பத்திரிகை!
- உண்மையை ஊரறிய எடுத்து விளக்கி நன்மையைச் செய்ய நாட்டம் கொண்ட நல்ல ஏடு!
- கலைவானிலே மின்னும் கருத்துக் களஞ்சியமாகத் திகழும் இதழ்!

விபரங்களுக்கு:—

கலை அரங்கம்

P. B. NO. 275 :: சென்னை - 1.

தம் பொங்குவதேன்! உன் பனிப் பார்வையால்—பகலவனின் வெப்பமும் ஒடுங்குவதேன்! உன் கனி மொழியால்—களைப்பு தீர்வதேன்? கவலைமாள்வது ஏன்? காந்தள் கரமுடையாளே! எனக்கு கழறமாட்டாயா?

மாசற்றவளே! நீ மச்சுவீட்டின் எக்களிப்பைப் பார்க்கிறாய்—குச்சு வீட்டின் ஏக்கத்தையும் பார்க்கிறாய்! உழைப்பவனையும் சந்திக்கிறாய்! உண்டு கொழுத்திருப்பவனையும் சந்திக்கிறாய்! நிலத்திலும் இருக்கிறாய்! நீரிலும் மிதக்கிறாய்! வான வெளியிலும் பறக்கிறாய்!!

மடுவிலும் குதிக்கிறாய்—மலையுச்சியிலும் சிரிக்கிறாய்! இலைகளை ஆட்டுகிறாய்—கிளைகளை முறிக்கிறாய்! களிப்பைக் காட்டுகிறாய்! கவலையையூட்டுகிறாய்! தீயை மூட்டுகிறாய்! தீயை அணைக்கிறாய்! சலிப்பைத் தருகிறாய்! சஞ்சலத்தை போக்குகிறாய்!! சாவைத் தருகிறாய்— சாவாமல் காக்கிறாய்! ஊளையிடுகிறாய்! ஊமையாகிறாய்! உடம்பைத் துளைக்கிறாய்! உள்ளே பாய்கிறாய்!! எங்கும் செல்கிறாய்! ஏதேதோ செய்கிறாய்! எவரையும் கேட்பதில்லை! காற்றே என்னே உன் விசித்திரக் கூற்று! குளிரை சுமக்கிறாய்—வெப்பத்தை தாங்குகிறாய்! மழையைத் தருகிறாய்—மழையுடன் போராடுகிறாய்! நன்மையும் செய்கிறாய்—தீமையும் செய்கிறாய்! ஆக்குகிறாய்! அழிக்கிறாய்! காற்றே நீ போற்றலையும் ஏற்பதில்லை! தூற்றலையும் ஏற்பதில்லை! இன்பமும் ஒன்றே—துன்பமும் ஒன்றே! எதையும் தாங்கும் இதயத்தை நீ எப்படி பெற்றாய் 'எங்கள் அண்ணா'வின் சொல் கேட்டா?

தூங்காத தெய்வமே! உனக்கு, ஏழை—பணக்காரன். ஏமாளி—எத்தன். கோழை—கோமாளி. தூயவன்—துரோகி. புண்ணியமூர்த்தி—பாபாத்மா. பத்தினி—பதிவிரதை. பாவி—பரத்தை. ஆண்டான்—அடிமை. கீழ்சாதி—மேல் சாதி. அறிஞன்—அறிவிலி. கலைஞன்—கொலைஞன். கள்ளன்—காமுகன். பள்ளன்—பார்ப்பான். ஆத்திகன்—நாத்திகன் என்ற பேதங்கள் ஏது? பரந்த கண்ணோட்டக்காரி! நீ எவர்க்கும் அஞ்சுவதில்லை! எதற்கும் அழுவதில்லை! கல்லையும்—இரும்பையும் தொழுவதில்லை! சாமி இல்லை! சாத்திரமில்லை—சடங்கு உன் முன் தூள்! தூள்!! நரகமும் இல்லை—மோட்சமும் இல்லை—இதைச் சொல்லும் தரகர்களையும் நீ அறியாய்! பாவம் இல்லை—புண்யமும் இல்லை! உறவுமில்லை—பகையுமில்லை—உனக்கு ஒன்றுமே இல்லை!! உனக்கு கட்டில்லை! காவலில்லை! தடையில்லை—மடையில்லை! சட்டமில்லை! திட்டமில்லை! உன்னை மாட்டிப் பிடிக்க வலையில்லை! பூட்டி வைக்க சிறையில்லை! உன்னையடக்க யாரால் முடியும்? உன் வாழ்வே! வாழ்வு! விடுதலை உணர்வோடு—உரிமை வாழ்வு நடத்துகிறாய்!! நானோ! ஏன் அந்த கேலிக் கதையைக் கேட்கிறாய்!! மாற்றானுக்கு அடிமை! பூசாரியின் ஆட்சியில் நான் ஒரு பிரஜை! வெட்கமாய் இருக்கிறது வெளியிட! வேறு வழி! தட்டிக் கேட்டால் தடியடி தர்பார்! உரிமையைக் கேட்டால்—திறக்கிறார்கள் சிறைக் கதவை! என் நாட்டிலோ ஏமாளிகள் ஏராளம்! எத்தர்கள் எண்ணிலடங்கார்! கண்ணிருந்தும் குருடராய் வாய் இருந்தும் ஊமையாய்—செவி இருந்தும்—செவிடராய் வாழ்வோர் பலப்பலர்! உரிமையை இழந்து உண்டு கொழுத்து-திண்டுகளில் துயில்வோர்—உரைக்க ஒண்ணார்! நான் என்ன செய்வேன்! செந்நீரை சூடாக்கி—கண்ணீர் உகுப்பதைத் தவிர; என்றாலும் உழைக்கிறேன்! உழைக்கிறேன்!! உழைத்துக்கொண்டே இருக்கிறேன்!!! சிற்றிடைக் காற்றே! செடி கொடிகள் உனக்குச் செய்யும் நன்றியை எண்ணிப்பார்! உன்னிடமுள்ள தீய பகுதிகளை தூய்மைப்படுத்துகின்றன! மனித குலத்தின் இழி பண்பை நினைத்தாயா? என்றென்றும் உன்னை மாசுபடுத்துவதிலேயே கண்ணாய் இருக்கின்றனர்; சே! சே! மானிட இனமே! நன்றி கெட்டது தானே! மடக்கொடியனையாளே! மாசற்ற காற்றுப் பாவையே! மன்னித்துவிடு! மறந்துவிடு!! மனித வர்க்கம் உனக்கிழைக்கும் அந்த கொடுமையை மன்னித்துவிடு!! மக்கள் சார்பில்—ஏன் உயிரினங்களின் சார்பிலும் கூட மன்னிப்புக் கோருகிறேன்: மன்னிப்பாயா?

மாண்புடைய வாயு மங்கையே! தேயாத நங்கையே!! நீ இறந்தால்—இன்பமேது—துன்பமேது! கலையேது—ஒளியேது! நீர் ஏது—நிலமேது! வீடேது—(காடேது) நாடேது!—நகரமேது! மனிதன் ஏது! மிருகமேது! பாம்பேது—பறவையேது! நதியேது! கடலேது!! உயிரினம் ஏது! உலகமே பிணக்காடாய்—சூன்ய பூமியாய் அன்றோ காட்சி தரும்! வேண்டாம்—வேண்டாம்!! உபகாரி! உயிர் தரும் தெய்வமே! நீ வாழு! பிறர் வாழ நீ வாழு!! நீடூழி வாழு!!! நான் இறந்தால் நாளை மறப்பர் என் அருமை இனத்தவர்! நீ இறந்தால் நாளை இருப்பரோ—இப்புவியோர்!! புனிதவதியே! பொங்கும் இயற்கைக் காதலி! புகல்வாய்!! புகல்வாய்!!

(அடுத்த பக்கம் பார்க்க)

## புதுமையா?

பரீத்பூர் என்னும் ஊரில் கோயிலுக்கருகில் ஓர் ஈச்சமரம் நின்றது. காலையில் கோவிலில் வழிபாட்டுக்காகமணி அடிக்கும் பொழுது அந்த மரம் கடவுளை வணங்குவதுபோல அடியோடு கீழே சாய்ந்துவிடுகிறது. மாலையில் அது எழுந்து நின்றுவிடுகிறது. மக்கள் அதை ஒரு புதுமையாக எண்ணி வந்தார்கள். அதற்குப் பலி ஊட்டி அந்த உணவை உண்டால் நோய்கள் தீருமென்று எண்ணினார்கள். இச்செய்தியைக் கேட்டவுடன் போஸ் காலையிலும் மாலையிலும் புகைப்படம் எடுக்கச் செய்தார். அது உண்மைதான் என்று அறிந்து கொண்டார். அதன்பின் அதன் காரணத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு கருவி அமைத்தார். அந்தக் கருவியின் வாயிலாக அந்த மரமானது வெப்பம் மிகும் பொழுது சாய்கிறதென்றும், வெப்பம் குறையும் பொழுது நிமிர்கிறதென்றும் அறிந்தார். இந்த மரம் மட்டும் இப்படி நடந்து கொள்வது ஏன் என்று சிந்தித்தார். தம்முடைய கருவியைக் கொண்டு மற்ற மரங்களையும் பரிசோதித்தார். அவைகளும் கண்ணுக்குத் தெரியாத அளவில் அந்த ஈச்சமரத்தைப் போல் நடந்து கொள்வதைக் கண்டார்.

—விஞ்ஞானி

## கலைக்கோயில்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

"தம்பி! நீ இங்கே கண்ட கட்டிலும், கிழிந்தபோர்வையும், பொத்தல் குடிசையும், நீ இரவு அருந்திய உலர்ந்த அடையும், நான் மிகவும் ஏழை என்பதை எளிதில் காட்டிவிடும்...... இப்பொழுது உன்னை, உன் ஊருக்கு அனுப்பக்கூடிய போதுமான பணம் என்னிடம் கிடையாது!...... இப்பொழுது என்னிடத்தில் உள்ளது இந்த இரண்டணா காசு

---

## காற்று

(முன்பக்கத் தொடர்ச்சி)

இரவும் பகலும் ஓயாது அசைந்தாடும் இசைக் காற்றே! இப்படி வா! உன்னை ஒன்று கேட்கிறேன்; அதற்குமட்டும் பதில் சொல்!! அன்புடையாளே! ஆலயங்களின் இருண்ட மூலைகளுக்கு நீ ஏன் அடிக்கடி செல்வதில்லை!? அவசியமில்லை என்றா? அச்சம் காரணமா? ஆண்டவனின் பயங்கர உருவைக் கண்டு மிரண்டா? தொந்தி சரிந்தபட்டரின் மிரட்டு விழிக்குப் பயந்தா? அல்லது "கோவில் தாசி மனை" என்றாரே தேசியத் தந்தை காந்தி—அந்த மேதினி போற்றும் புனிதரின் பொன் மொழி கேட்டதன் விளைவா? இல்லாவிடில், உன் மாணிக்கக் கற்பை அங்கிருக்கும் "கடவுள் தூதர்கள்" காணிக்கையாக்கிக் கொள்வரோ என்ற கலக்கமா? சொல்! நில்லாமல் நீந்தும் நிலச் செல்வியே! சொல்........ 'ஆம்!' என்று நீ அழுத்திக் கூறுவது என் செவிகளில் தெளிவாக கேட்கிறது. "உஸ்...உரக்க பேசாதே!" அதோ உருட்டு விழியோடு சங்கராச்சாரியார் உன்னைப் பார்க்கிறார்! பிறகு நெற்றிக்கண்ணைத் திறந்து விடப்போகிறார்! ஓடு...ஓடு....ஒய்யாரக் காற்றே நீ ஓட்டமாய் ஓடி விடு!! அதற்குள் ஒரு தித்திக்கும் செய்தி... மறந்தே விட்டேன்!! தாயகத்தை தருக்கர்களிடமிருந்து மீட்க வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! விரைவில் 'புயலென'க் கிளம்பப் போகிறது, உரிமையை தர மறுத்தால்!! அப்பொழுது 'புழுதி'கள் பறக்கப் போவதை! நீ பார்!! ஆடிக் காற்றே அவசியம் நீ வந்து வேடிக்கைப் பார்!!

தான்....... இதில் ஒரு 'கவர்' வாங்கி உனக்கு வேண்டியவர்களுக்குக் கடிதம் போடப்பா" என்று கூறி முத்துவிடம் இரண்டணாவைக் கொடுத்தார் தாத்தா.

முத்து இரண்டணாவை வாங்கிக் கொண்டான். எப்படியோ கஷ்டப்பட்டு இரண்டணாவிற்கு ஒரு 'கவர்' வாங்கினான். தன் அருமை அம்மாவிற்கு கடிதம் எழுத ஆரம்பித்தான்.

அன்புள்ள அம்மா!

நான் உனக்கு முதன் முதலாக எழுதும் கடிதம் இதுதான்... இதை நான் எங்கிருந்து தெரியுமா எழுதுகிறேன்?....... சென்னையிலிருந்து,...

### வேண்டுமா

மக்களுக்கு ஒழுக்கங் கற்பிக்கும் ஆற்றல் முழுவதும் சமயத்திற்கே...உண்டு என்று 'ஏ'காரம் போட்டுச் சொல்லும் குன்றக் குடியாரே! சமையல்காரியின் கையைப் பிடித்து இழுத்த பண்டாரச் சன்னதிகளின் பட்டியல் வேண்டுமா? வேலைக்காரியைப் படுக்கை அறைக்கு இழுத்துச் சென்ற சன்னிதானங்களின் பட்டியல் வேண்டுமா...பீடம் ஏறியிருந்த பண்டார சன்னதிகளைக் கொன்றுவிட்டுத் தாம் பீடம் ஏறிக்கொண்ட தம்பிரான்களின் கதைகளைப் பொதுமக்களை விட்டுச் சொல்ல வைக்க வேண்டுமா? ஒழுக்கத்தில் ஐயம் ஏற்படும் அளவுக்கு வழக்கு மன்றங்களிலே கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பண்டார சன்னதிகளின் பட்டியல் வேண்டுமா? பண்டார சன்னதிகளின் பீடத்துக்காக உயர் நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட் வரையில் ஓடியாடி அலைந்த சமயநெறி வாழ்ந்த தம்பிரான்களின் பட்டியல் வேண்டுமா? ...... ஒழுக்க நெறிக்கு மாறுபட்டதும், நாட்டின் சட்ட வரம்பிற்கு முரண்பட்டதுமான கஞ்சாச் செடிகளைத் தம் தோட்டத்திலேயே பயிரிட்டு வளர்த்து வந்த மடாலயத்தின் பெயரைச் சுட்டிக் காட்ட வேண்டுமா?

—தோழர் இரா. நெடுஞ்செழியன்

என்று நீ நினைப்பாய்!...... தவறு அம்மா!... சென்னைக்கும் பலமைல் தூரத்திலிருக்கும், மாமல்லபுரத்திலே மலையோரக் குடிசையிலிருந்து எழுதுகிறேன்...... 'சென்னையிலிருந்து, மாமல்லபுரத்திற்கு எப்படி வந்தேன்'—இது உனக்கு புதிராயிருக்கலாம்... நாம் ஒன்றை நினைக்கிறோம் அது வேறொன்றாக முடிகிறது!...... அப்படித்தான் கிராமத்திற்கு வர இருந்த நான் இங்கேவர நேரிட்டது. அதன் காரணம், என்னவென்றே எனக்கு புரியவில்லை அம்மா! இவைகளையெல்லாம் நேரில் விளக்குகிறேன். இக்கடிதம் கண்டவுடன் காணாத கன்றைக் கண்ட, பசு, காற்று வேகத்தில் வருவதைப் போல, தாங்களும் இங்கே வருவீர்களென எதிர் பார்க்கிறேன்.

அன்பு மகன்,
முத்து.

கடிதத்தை எழுதி முடித்தான்; கவரில் போட்டான்; கடிதம் கிராமத்திற்கு பறந்தது!

மறுநாள். "தம்பி!" என்று கூப்பிட்டார் தாத்தா முத்து வந்தான்.

"தம்பி! உனக்கு ஒரு கலை கற்று கொடுக்கப் போகிறேன்......"

"என்ன கலை? தாத்தா!"

"தம்பி! இங்கேயுள்ள சிற்பங்களைப் பார்க்க வெளியூர்களிலிருந்து மக்கள் வருவார்கள்....... இங்குள்ள சிற்பங்களையெல்லாம் அவர்களுக்கு காண்பிக்க வேண்டும்...... அவர்கள் பணம் கொடுப்பார்கள்... நீ வாங்கி கொள்ள வேண்டும்....... வேண்டிய பணம் கிடைத்தவுடன் நீ உன் அம்மாவிடம் போகலாம்......" என்றார் தாத்தா.

"சரி தாத்தா" என்று தலையை ஆட்டினான் முத்து.

யாரோ சிலர் மலையடிவாரத்தில் போய்க் கொண்டிருப்பதைக் கண்டான், முத்து "தாத்தா! அதோ யாரோ சிற்பங்களைப் பார்க்க போகிறார்கள்...... அவர்களுக்குச் சிற்பங்களைக் காட்ட இப்பொழுதே போகிறேன்!" என்று கூறிக்கொண்டே, ஓடினான் முத்து.

தான் கற்று கொடுத்த கலையை அன்புடனும், ஆர்வத்துடனும் பயிலப்போகும், முத்துவை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு, அப்படியே நின்றார், அந்த அன்புத் தாத்தா! (தொடரும்)

# திரை அரங்கம்

## அந்த நாள்

(விமர்சனம்)

ராஜன் ஒரு திறமையுள்ள என்ஜினியர். அவன் திறமையைப் பயன்படுத்திக்கொள்ளாமல் அலட்சியப் படுத்துகிறது ஆங்கில ஆட்சி. அதனால் ஜப்பானியரின் கையாளாகிறான். ஆனால் கடைசி நேரத்தில் அதை அறிந்த அவன் மனைவி உஷா தடுக்கிறாள். ராஜன் அவள் சொல்லைக் கேட்காததால் அவனைச் சுட துப்பாக்கியை எடுக்கிறாள். ராஜன் அதை அவளிடமிருந்து பறிக்க முயற்சிக்கும்போது குண்டு வெடித்து இறக்கிறான்.

இந்தக் கதையை ஒரு துப்பறியும் படம்போல் எடுத்திருக்கின்றனர். மற்ற படங்களைப்போல இதில் பாட்டுகளோ, நடனமோ இல்லை. என்றாலும் படம் சிறியதாக, விறுவிறுப்பாக இருக்கிறது. முற்பகுதியைவிட படத்தின் பிற்பகுதியில் விறுவிறுப்பு அதிகம்.

திறமைசாலி ராஜனாக திரையுலக மன்னன் சிவாஜி கணேசன் தோன்றுகிறார். இடைவேளைக்குப் பின்தான் அவர் நடிக்க நிறைய சந்தர்ப்பமளித்திருக்கிறார்கள். நாட்டைக்காட்டிக் கொடுக்கும் துரோகியாக திறமையாக நடிக்கிறார். எதிரே துப்பாக்கியுடன் மனைவி நிற்கும்போது, விகாரமடைந்த அவர் முகத்தில் ஒரு ஏமாற்றுச் சிரிப்பை வரவழைப்பது நன்றாக இருக்கிறது. குறைகூற முடியாத வண்ணம் நடித்திருக்கிறார். பண்டரிபாய் வழக்கம்போல் வசனங்களை நன்கு பேசி நடிக்கிறார். அடுத்து சி. ஐ. டியாக வரும் 'ஜாவர் சீதாராமன் மேல் நாட்டு நடிகரைப் போல நடிக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார். மற்றவர்கள் சில நிமிடங்களே தோன்றுகின்றனர்.

எஸ். பாலசந்தர் திறமையுடன் டைரக்ட் செய்திருந்தாலும், குறைகளில்லாமலில்லை. நாட்டியக்காரி அம்புஜம் படத்தின் நீளத்திற்காகவே சேர்க்கப்பட்டிருக்கிறாள். ராஜனின் தம்பி மனைவி ஹேமா அம்புஜம்தான் ராஜனைக் கொன்றிருக்கவேண்டும் என்று கூறுகிறாள். அம்புஜம் கடிதங்களை காட்டி ராஜனை மிரட்ட, அவன் துப்பாக்கியைக் காட்டி அதைப் பறித்துக் கொள்ள, பின் ராஜனின் காலைத் தொட்டு வணங்குவதாக பாசாங்கு செய்து துப்பாக்கியை எடுத்துச் சுட்டிருக்கலாம் என்று அம்புஜம் கூறுகிறாள். இவ்வளவு ஊகம் அநாவசியமானது; நம்பமுடியாதது. அம்புஜம் ராஜன் உடன் அழைத்துச் செல்ல மறுத்ததால், அருகிலிருந்த துப்பாக்கியால் சுட்டுவிட்டாள் என்றாவது கூறியிருக்கலாம். சின்னையா துப்பாக்கியை எடுத்து, ராஜனை சுடுவது இயற்கையாக இல்லை. எவ்வளவு பெரிய வீடானாலும், மாடியில் நடப்பது கீழே இருந்தவர்களுக்குத் தெரியவில்லை என்பது பொருந்துவதாக இல்லை. மாடியில் ராஜனுக்கும் உஷாவிற்கும் தர்க்கம் நடக்கிறது. உஷா ராஜனின் ரேடியோவைத்



'அந்த நாளில்' ஒரு காட்சி

தூள் தூளாக உடைக்கிறாள். இவ்வளவும் கீழே இருப்பவர்களுக்கு கேட்கவில்லை என்றாலும், பக்கத்து பங்களாவில் கேட்ட, துப்பாக்கிச் சத்தமாவது நிச்சயம் கேட்டிருக்க வேண்டும். சுட்ட பின் உஷா பிணத்தின் கால்களைக் கட்டிக்கொண்டு அழுதிருக்கிறாள்; உடைந்த ரேடியோவை அப்புறப் படுத்தியிருக்கிறாள். அதற்குள் கீழே இருப்பவர் நிச்சயம் மேலே வந்திருக்கவேண்டும். இதை டைரக்டர் கவனித்திருக்க வேண்டும். தவறிவிட்டார்.

சில குறைகள் இருந்தாலும் ஒரு நல்ல கருத்தை உள்ளடக்கிய படம் 'அந்த நாள்! ராஜன் திறமைசாலி! இந்தியா பூராவும் ரேடியோக்களால் நிரப்ப முடியும் என்று கூறுகிறான். அரசாங்கம் உதவி செய்யவில்லை. அவனை அலட்சியப் படுத்தியது! அதன் விளைவு அவனை விபரீத வழியில் இறங்க வைத்தது. இன்று 'நம்' ஆட்சி நடக்கிற தென்றாலும், இந்த நாட்டிலே எத்தனையோ திறமைசாலிகள் ஆணவ ஆட்சியால் அலட்சியப்படுத்தப் படுகின்றனர். அதன் விளைவு விபரீதமாகலாம் என்பதைதான் 'அந்த நாள்' காட்டுகிறது! 'அந்த நாள்' இந்த நாட்டுக்கொரு பாடம்! திறமைசாலிகளை அலட்சியப் படுத்துவதனால், அவர்கள் மனம் முறிந்து குறுக்கு வழிகளில் இறங்க சூழ்நிலை தூண்டுகிறது. உஷா கூறுகிறாள், ராஜனிடம் 'இன்று நடப்பது ஆங்கிலேயர் ஆட்சிதானே' என்று. ஆனால் ஆங்கிலேயருக்குப் பதில் வடநாட்டார் இன்று வந்துள்ளனர். ஆனால் நிலைமை மாறவில்லை. அந்த நாளில் ஆங்கிலேயர் நடப்பதைப் போல்தான் இவர்களும் நடக்கின்றனர். இவர்களுக்கு 'அந்த நாள்' எச்சரிக்கை செய்கிறது, திறமையுள்ளவர்களை அலட்சியப்படுத்தி ஒதுக்காதே என்று!

ஜாவர் சீதாராமனின் வசனங்கள் சுமாராயிருக்கின்றன. நல்ல முடிவையும், நல்ல கருத்தையும் கொண்ட 'அந்த நாள்' ஏ. வி. எமின் துணிகர முயற்சி! புது முயற்சியில் ஈடுபட்ட ஏ. வி. எம்மை பாராட்டுகிறோம்!

—தாரா

## செய்திச் சுருள்

### நீர்முளை தி. மு. க. துவக்க விழா

4—4—54 அன்று நீர்முளை தி. மு. க துவக்க விழா திருத்துறைப்பூண்டி தாலுக்கா நீர்முளையில் தோழர், வை. சுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. S. காளிமுத்து செயலாளராகவும், S. அப்துல் ஹமீது துணைச்செயலாளராகவும் M. M. அப்துல்லா பொருளாளராகவும் P. N. கோவிந்தராசன் மாவட்ட பிரதிநிதியாகவும் செயற்குழு உறுப்பினராக பதினோருபேரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### பகுத்தறிவு நாடக மன்றம்

20—3—54 அன்று பண்டாரவளை சிவிலி வித்தியாலய மண்டபத்தில் பகுத்தறிவு நாடக மன்றத்தினரால் 'திராவிட மணி' (இலங்கை தி. மு. க. மாதமிரு முறை இதழ்) வளர்ச்சி நிதிக்காக 'இரத்தக் கண்ணீர்' என்ற புரட்சி நாடகம் திரு. M. V. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. பிறகு பொதுச் செயலாளர் A. இளஞ்செழியன் நன்றி கூற முடிந்தது.

### "சுதி" திறப்பு விழா

1—4—54-லில் பம்பாய் தி. மு. க. அலுவலகத்தில் 'சுதி' (திங்கள் இருமுறை) பத்திரிகை திறப்பு விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. அதுபோது தோழர் ச. தர்மராசன் அனைவரையும் வரவேற்றுபேச, தோழர் சேரன் தலைமை தாங்கி திறந்து வைத்தார். இறுதியில் தோழர் ம. இரா. எ. ரெத்தினசாமி நன்றி நவிலும்போது 'சுதி' தி. மு. க. இலட்சியங்களைத் தாங்கிவரும் என்று குறிப்பிட்டார்.



'காதல் ஜோதி'யில்
நடிப்புப் புலவர் K. R. ராமசாமி

## கேளுங்கள்?

கேள்வி: புதுமைப்பித்தன் என்பவர் யார்? அவர் எந்த ஊரையும், கட்சியையும் சேர்ந்தவர்? அவர் இப்போது எங்கு இருக்கிறார்?

சு. பாண்டியன், வத்தலக்குண்டு.

பதில்: புதுமைப் பித்தன் என்பவர் தமிழ் நாட்டின் சிறுகதை மன்னன். அவர் திருநெல்வேலியைச் சார்ந்தவர். உண்மையான எழுத்தாளர்களின் கட்சியைச் சேர்ந்தவர். இப்போது அவர் ஆயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்களில் இருக்கிறார்.

O O O

கேள்வி: பெண்களுடைய தியாக உணர்ச்சியை விளக்குவது எது?

எம் எஸ். பழநி, கல்லிடைக்குறிச்சி.

பதில்: தாய்மையை! கடமை உணர்ச்சியை

O O O

கேள்வி: தற்போது வள்ளுவரின் குறளுக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உரை எழுதுவதாக என் நண்பன் கூறுகிறான். இது உண்மையா?

அ. காத்தான், திருப்பூந்துருத்தி.

பதில்: உண்மைதான்!

O O O

கேள்வி: ஒரு நாட்டின் சிறப்புக்காக கலை பயன்படுகிறதா? தொழில் பயன்படுகிறதா?

கலைமாறன், வத்தலக்குண்டு.

பதில்: நாட்டின் சிறப்புக்குக் கலையும், முன்னேற்றத்திற்குத் தொழிலும் பயன் படுகின்றன.

O O O

கேள்வி: தமிழ் நாட்டு மன்னர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள எந்த நூலைப் படிக்கவேண்டும்?

சே. அண்ணாமலை, ஆரணி.

பதில்: அண்ணாமலை பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள T. V. சதாசிவ பண்டாரத்தார் எழுதியுள்ள சோழர் வரலாறு' 'பாண்டியன் வரலாறு' போன்ற நூல்களைப் படியுங்கள்.


### இலக்கிய நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் மூலம் | 0 | 8 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 |
| திருக்குறள்விளக்கவுரை | 3 | 8 |
| திருக்குறள் பரிமேலழகருரை | 5 | 0 |
| நீதிநூல் தொகை I | 1 | 8 |
| ,, II | 2 | 8 |

ஸ்ரீமகள் கம்பெனி - சென்னை-1


199106

மதுரை மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக

## இரண்டாவது மாநாடு

மே 15, 16 சனி, ஞாயிறு கிழமைகளில்
மதுரையில் நடைபெறும்.

முதல் நாள் :

## சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர் : கே. ஏ. மதியழகன்

திறப்பாளர் : டி. கே. சீனிவாசன்

இரண்டாம் நாள் :

## அரசியல் மாநாடு

தலைவி : சத்தியவாணிமுத்து அம்மையார்

திறப்பாளர் : ப. உ. சண்முகம்

முதலியவர்களையும் அழைப்பதென மதுரை மாவட்ட தி. மு. கழக செயற்குழு 28—3—54 அன்று சோழவந்தானில் கூடி முடிவு செய்திருக்கிறது.

—செயலாளர் : தொந்தி

Printed and Published by—S. Francis, at Srimagal Press, 122 Varadu muthiappan Street, Madras-1. Editor:- Palvannan.